யாழ்நகரில்
தரமான
A/L 86
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, Jaffna.

சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

88 III ம் பிரிவு
A/L வகுப்புக்கள் ஆரம்பம்:
02-08-1986 சனி காலை
9 30 மணி
PHYSICS 9.30 - 10.30
CHEMISTRY 10.30 - 11.30
ZOOLOGY 11.30 - 12.30
BOTANY 12.30 - 1.30
PURE & APP. MATHS 11.30 - 1.30
விபரங்கட்கு:-
New Master
Institute
B.M.C. Lane, Jaffna

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ ஆடி ௴ 17 ௳ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃதா பிறை 25 (02 08-1986) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY இதழ்: 28

கருத்துக் கலசம்

மயூரா

பட்டினிச் சாவா?

உருளைக் கிழங்குச் செய்கை 373 ஏக்கரால் குறைவு. வெங்காயம், மிளகாய்ச் செய்கையும் அதே நிலையில்

விவசாயிகளுக்குத் தேவையான பசளை கப்பல் மூலம் வருகிறது

யாழ் மாவட்டத்தில் விதை நெல் இல்லை வெளியிலிருந்து தருவிக்க ஏற்பாடு கிளிநொச்சியில் சிறுபோக அறுவடை பாதிக்கப்படும் அபாயம். பெரிய வெங்காயம் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகமாகும்.

கடந்த வாரத்தில் உதயனில் வெளிவந்த விவசாயம் சம்பந்தப்பட்ட செய்திகளின் தலைப்புகளையே நீங்கள் மேலே இதுவரை வாசித்தீர்கள்.

யாழ்ப்பாணமாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் விவசாய நிலைமைகளை அவை பிரதிபலிப்பதைக் காணலாம்.

இரண்டு மாவட்டங்களிலும் விவசாயத்தைச் சரவரச் செய்யமுடியாத கஷ்டங்கள் உருவாகியுள்ளன. உருவாக்கப்பட்டு உள்ளன. விவசாயப் பொருள்கள் கிடைப்பதாக இல்லை. எரிபொருளுக்கு [illegible] அதனால் உற்பத்தி -- விளைச்சல் குறைந்து வருகிறது. விளைந்த உற்பத்திப் பொருள்களையும் சந்தைப்படுத்த முடியாத கஷ்டம்.

எல்லா வகைகளாலும் தமிழ் மாவட்டங்களில் விவசாயம் மந்த நிலைக்கு வருவதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

எமக்குத் தேவையான உணவுப் பொருள்களை நாமே உற்பத்திசெய்யவேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு நேர்மாறாக விவசாய உற்பத்தி குறைந்துவருகிறது.

இப்படி எத்தனை காலத்துக்குப் போகும்? இதனைத் தடுக்க மார்க்கங்கள் இல்லையா?

இவை குறித்து கவனம் செலுத்த வேண்டிய தருணம் வந்துவிட்டது எமது ஆற்றலுக்கும் சக்திக்கும் உட்பட்ட விதத்திலாவது நொந்துபோயிருக்கும் விவசாயத்துக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையை அவசரகாலமாகக் கருதி, யுத்த காலமாகக் கருதி அதற்கேற்ற விதத்தில், புதிய சூழ்நிலையால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் அவசர விவசாயத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அப்போது தான் மக்களை ஓரளவாவது பட்டினியிலிருந்து காப்பாற்ற முடியும்.

பெற்றோலும் டீசலும் வருவதற்கு முன்னர் எமது முன்னோர்களும் விவசாயம் செய்தார்கள் பசளையும்.

(4ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அதிகாரிகள்
போராளிகள் பேச்சு
இப்போது நடக்காது

புதுடில்லி, ஆக. 1

தமிழ்ப் போராளி அமைப்புக்களைத் தற்போதைக்கு சந்திப்பது இல்லை என்று இந்திய அரசு அதிகாரிகள் தீர்மானித்துவிட்டனர்.

அரசு-கூட்டணி முதல் கட்டப்பேச்சுக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை என்று காணப்பட்டதைத் தொடர்ந்தே இத்தீர்மானத்துக்கு இந்திய அரசு அதிகாரிகள் வந்துள்ளனர்.

இம்மாதம் நடைபெறும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே இந்திய அரசு அதிகாரிகள் போராளி அமைப்புக்களைச் சந்திப்பர்

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசின் நிலைப்பாடு, மிதவாதத் தமிழ்த் தலைவர்களையே திருப்திப்படுத்தாத நிலையில், போராளி அமைப்புக்களைச் சந்தித்துப் பேசுவதில் பயன் எதுவும் ஏற்படாது என்று புதுடில்லி அரசு அதிகாரிகள் கருதுகின்றனர். (அ-ஐ-எ)

முஸ்லிம் பகுதிகளை மீட்க இணைப்பே வழி
முஸ்லிம் பிரமுகர் அறிக்கை

கல்முனை, ஆக. 1

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வு ஒன்றில்தான் பெரும்பான்மை இனத்தவரிடம் பறிகொடுத்த முஸ்லிம் பிரதேசங்களை மீட்டு எடுக்க முடியும்.

இப்படி அக்கரைப் பற்று பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எம். ஐ. அகமது லெப்பை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்

அக்கரைப்பற்றுப் பகுதியில் நுரைச்சோலை, வட்டை, அம்பலத்தாறு, சேனைக்கண்டம், சிறுத்தையின் ஒரு பகுதி ஆகிய முஸ்லிம் கிராமங்கள் இன்று தனிச் சிங்களக் கிராமங்களாகி விட்டன.

கல்ஓயாத் திட்டம் வந்த பின்னர் சுமார் ஆயிரம் ஏக்கர் காணி அக்கரைப்பற்றுப் பகுதியில் முஸ்லிம்களிடமிருந்து பறிபோய்விட்டன.

வடக்கு-கிழக்கு இணைப்பு மூலம் தான் இழந்த காணிகளை முஸ்லிம்கள் மீட்டு எடுக்க முடியும் - இப்படி ஜனாப் அகமது லெப்பை அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ-எ-84)

கட்டைபறிச்சானில் 4 இராணுவத்தினர் பலி
விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 2

கட்டைபறிச்சானில் நடைபெற்ற நேரடி மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கட்டைபறிச்சான் இராணுவமுகாமில் இருந்து முதலாம் திகதி காலை 7 மணியளவில் எம்மக்களை வேட்டையாடுவதற்காக நாற்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக புறப்பட்டு இராணுவ முகாமிலிருந்து 500 யார் தொலைவில் வந்து கொண்டிருந்த வேளை இவர்களை இடைமறித்து எமது தரப்பினர் நேரடி மோதல் தொடுத்தபோது கடும் சமர் இடம் பெற்றது

நிலைகொள்ள இயலாத இராணுவத்தினர் தம் இழப்புக்களுடன் முகாம் திரும்பினர். இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் இல்லை — இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

உணவு முத்திரை பெற அங்கு ஒருவர்கூட இல்லை

திருகோணமலை, ஆக 2

திருகோணமலை முருகபுரி, பத்தாம்குறிச்சி ஆகிய பகுதிகளில் உணவு முத்திரை பெற்றுவந்த ஒருவர்கூட இப்போது அங்கு இல்லை.

அனைவரும் குடும்பங்களாக இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மற்றும் பல பகுதிகளுக்கு அகதிகளாகச் சென்று விட்டார்கள்.

திருகோணமலைப் பகுதியில் இதுவரை சுமார் 35,000 பேர் உணவு முத்திரை பெற்று வந்தனர்.

இம்முறை சுமார் 30,000 பேருக்கே உணவு முத்திரை வழங்கப்பட்டது. மிகுதியான சுமார் 5,000 பேருக்கான உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படாமல் எஞ்சியுள்ளன.

வன்செயல் காரணமாக ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக இடம் பெயர்ந்ததே இதற்குக் காரணமாகும். (உ-எ-150)

சுபநேரம்

02—08—1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3-03 முதல் 4-33 வரை
ராகுகாலம்:
9-03 முதல் 10-33 வரை
இவை யாழுக்கும் இலங்கைக்கும் பொருந்தும்

அரசு - கூட்டணி அடுத்த சந்திப்பில்

திருமலைத் துறைமுகம்:
பேச்சில் முக்கிய இடம்

கொழும்பு ஆக 2

திருகோணமலைத் துறைமுகமும் அதன் சுற்றுடலும் பற்றிய விடயமும் அரசு—கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் முக்கிய இடத்தை வகிக்கும் என்று தெரிகிறது

சென்ற மாதம் நடந்த அரசு — கூட்டணி முதற் கட்டப்பேச்சுக்களில் திருமலைத்துறைமுகப் பிரச்சினை ஆராயப்பட்டது.

இலங்கை அரசு தனது மாகாணசபை யோசனைகளில் திருமலைத்துறைமுகமும் அதன் சுற்றுடலும் மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

முதற் கட்டப்பேச்சுக்களில் கூட்டணி இப்பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டது

துறைமுகத்தின் சுற்றுடல் எத்தனை தூரத்துக்கு அமையும் என்று கூட்டணித் தலைவர்கள், அரசு தரப்பினரைக் கேட்டனர்.

துறைமுகத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் அரை மைல் எல்லைக்குள் வரும் பகுதியை மத்திய அரசு தனது நிர்வாகத்தில் வைத்து இருக்கும் என்று கருத்துப்பட அரச தரப்பில் பதிலளிக்கப்பட்டது

அப்படி என்றால் திருமலை பட்டணம் முழுவதும் துறைமுகத்தின் சுற்றுடல் என்ற பகுதிக்குள் வந்துவிடும் என்று கூட்டணியினர் தெரிவித்தனராம்.

இதைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது திருமலைத் துறைமுகம் பற்றிய இறுதி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அரசு தரப்பினர் இணங்கினர் என்று தெரிய வருகிறது (உ-எ)

முதலாவது 'சென்றி' இலக்குவன்தான் !

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2

முதன் முதலில் 'சென்றி'க்கு நின்றவன் இலக்குவனே

இவ்வாறு நேற்று நல்லூரில் நடைபெற்ற கம்பன் விழா பட்டிமன்றத்தில் "இன்றைய சூழலில் எம்மை வழிப்படுத்துவதில் முதன்மை பெறும் இலக்கியம் — கம்பராமாயணம்" என்ற தலைப்பில் பேசுகையில் திரு. க. சிவலிங்கராஜா கூறினார்

கம்பராமாயண காவியத்தில் சீதைக்குக் காவலாக — சென்றியாக — இலக்குவனை நிறுத்திவிட்டே இராமன் மாயமானைத்தேடி போனான் என்று அவர் சொன்னார்.

அமைச்சர்கள் சரியாகச் செயல்பட்டால் தான் தலைவன் சரியான நெறியில் போவான். இராவணனின் மந்திரிசபை இராவணனை சரியாக நெறிப்படுத்தியிருந்தால் அவனுக்கு அழிவு ஏற்பட்டிருக்காது — இப்படி அவர் கூறினார். (உ-5)

வடக்கு, கிழக்கில்

கடலோர பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

கொழும்பு, ஆக 2

வடக்கு கிழக்கு மாகாணங்களின் கடற் பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

பெருந்தொகையான தீவிரவாதிகள் கரையோரப் பகுதியில் வந்திறங்கத் திட்டமிடுவதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே கடல்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

வழக்கமாக பாவிக்கும் அதிவேக படகுகளை விடுத்து தெப்பம், கட்டுமரங்களில் தீவிரவாதிகள் கரையோரங்களில் வந்து இறங்குவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதன் காரணமாக வல்வெட்டித்துறை, காரைநகர், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை கல்முனை உட்பட சகல கரையோரப் பகுதிகளிலும் தீவிரவாதிகள் வரும் தெப்பம், கட்டுமரங்களைக் கண்டுபிடிக்க 'டிங்கி' படகுகளை உபயோகப்படுத்துவதில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் (உ-எ)

தூக்கத்தில் கைதாகும் தமிழ் இளைஞர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 2

வவுனியா நகரில் நள்ளிரவு நேரங்களில் ரோந்து செல்லும் சிப்பாய்கள் திடீரென வீடுகளில் புகுந்து அங்கு தூக்கத்தில் இருக்கும் தமிழ் இளைஞர்களை கைது செய்து முகாமுக்குக் கொண்டு செல்கிறார்களாம்

செவ்வாயன்று மட்டும் நள்ளிரவில் விளாத்திக்குளம், சரடிக் குளம், சாஸ்திரிக் குளம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற சிப்பாய்கள் அங்கு பல வீடுகளில் நித்திரையில் இருந்த 15 இளைஞர்களை தட்டி எழுப்பி தம்முடன் அழைத்துச் சென்றனர்.

இதன் காரணமாக இப்பகுதிகளைச் சேர்ந்த பெற்றோர்கள் இரவு நேரங்களில் காடுகளில் மறைவாகத் தங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறதாம். (உ-10)

பொலிஸ் படைக்கு மேலும் 11 ஆயிரம் பேர்

கொழும்பு, ஆக 2

1987ஆம் ஆண்டு இறுதிக்குள் பொலிஸ் படைக்கு மேலும் 11,000 பேரைச் சேர்க்கப் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை நடந்த பொலிஸ் ஆள் சேர்ப்பு நடவடிக்கைக்கு நல்ல பலன் கிடைக்கவில்லை

இந்தக் காரணத்தை வைத்து ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரங்களை ஊர் ஊராகவும் பொலிஸ் நிலையங்கள் மூலமும் இலவசமாக விநியோகிக்கவும் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்து உள்ளது. (உ-ஐ-எ)

15 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது

கொழும்பு, ஆகஸ்ட் 2

கொழும்பு குடியகல்வு, குடிவரவு திணைக்களத்திற்குச் சென்ற 15 வடபகுதி தமிழ் இளைஞர்கள் நேற்று முன்தினம் (வியாழன்) கைது செய்யப்பட்டனர்

இந்த இளைஞர்களின் பாஸ்போட்டுகளில் தெரிவிக்கப்பட்ட விவரங்களும் அவர்களின் அடையாளக்காட்டுகளில் தெரிவிக்கப்பட்ட விவரங்களும் வித்தியாசமானவையாக இருந்த காரணத்தை வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். (உ-ஐ-எ)

இடைவெளியை நிரப்பப் பேச்சுகள் உதவும்

புதுடில்லி, ஆக.1

இரண்டாம் கட்ட அரசு — கூட்டணிப் பேச்சுக்கள் இலங்கை அரசுக்கும் கூட்டணியின் நிலைப்பாட்டுக்கும் இடையே உள்ள இடைவெளியை நிரப்புவதற்கு உதவும்.

— இப்படி இந்தியா நம்புவதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு டிக்ஸிற் புதுடில்லியில் செய்தியாளர் ஒருவரிடம் தெரிவித்தார்.

திரு டிக்ஸிற் அடுத்த வார நடுப்பகுதியில் கொழும்பு திரும்புவார். (ஐ-எ)

இணைப்புக் குறித்து இணக்கம் இல்லை
கூட்டணி டில்லியில் தகவல்

புதுடில்லி, ஆகஸ்ட் 1

வடக்கு கிழக்கு இணைப்புக்கு இலங்கை அரசாங்கம் இணங்கவில்லை

இப்படித் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்ததாக இந்தியச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்தது.

இதே வேளை புதுடில்லி சென்றிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழு அங்கு இந்திய வெளியுறவு கொள்கை வகுப்புக் குழுவின் தலைவர் ஜி. பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சர் திரு பி. சிவசங்கர், இணை அமைச்சர் பி. சிதம்பரம் ஆகியோரை வெள்ளியன்று சந்தித்துப் பேசியது

இனப்பிரச்சினை தொடர்பாக கொழும்பில் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கூட்டணி குழுவினர் விளக்கமளித்தனர்.

வியாழனன்று கூட்டணிக் குழுவினர் வெளியுறவுச்செயலாளர் ஏ.பி வெங்கடேஸ்வரனைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

ராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, ஆக 1

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன், இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் ஆகியோருடன் நேற்று ஆலோசனை நடத்தினார்

இந்த ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது (உ)

அரச ஆதரவாளர் நையப் புடைக்கப்பட்டார்

கொழும்பு, ஆகஸ்ட் 2

அரசுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பியவர் நையப் புடைக்கப்பட்டார்.

மஹரகமவில் நடந்த மக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுக் கூட்டம் ஒன்றில் இச் சம்பவம் இடம்பெற்றது

நேற்று முன்தினம் இக் கூட்டம் நடை பெற்றது

கூட்டத்துக்கு ம ஐ மு. தலைவர் திரு தினேஷ் குணவர்த்தனா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பௌத்த பிக்கு ஒருவர் அரசாங்கத்தைத் தாக்கிப் பேசினார்.

அச்சமயம் 'காவி உடையில் பொய்சொல்லாதே' — என்று கூட்டத்தில் இருந்த ஒருவர் சத்தமிட்டார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் கத்தியவரைப் பிடித்து நையப் புடைத்தனர்.

இறுதியில் திரு தினேஷ் குணவர்த்தனா மேடையை விட்டிறங்கி வந்து அந்த நபரைக் காப்பாற்றினார். (உ-ஐ-எ)

கொலையானவர்கள் அப்பாவி மக்களே
சத் தொனியில் டியூ பேச்சு

கொழும்பு, ஆக 2

நூற்றுக் கணக்கில் போராளிகளைக் கொன்றுவிட்டதாக அரசு கூறுகிறது. உண்மை அது அல்ல அப்படிக் கொல்லப்பட்டவர்கள் எல்லாரும் அப்பாவி மக்களே

இப்படி கலவான எம்பி. திரு டியூ குணசேகரா சொன்னார்

நுவரெலியாவில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு குணசேகரா மேலும் சொன்னதாவது:—

இன்றைய அரசு, பதவிக்கு வந்த பின்னர் தான் பல இனக்கலவரங்கள் ஏற்பட்டன அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டனர். உத்தியோகம், கல்வி முதலிய துறைகளில் தமிழர் புறக்கணிக்கப்பட்டனர். விரக்தி அடைந்த தமிழ் இளைஞர் ஆயுதமேந்தினர். அப்படி அவர்கள் ஆயுதம் தாங்குவதில் என்ன தவறு உண்டு?

—இப்படி திரு டியூ குணசேகரா கேட்டார். (உ-ஐ-எ)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

தமிழர்களை நிபந்தனையின்றி நிராயுதபாணியாக்கக் கூடாது

ஜனாதிபதியைச் சந்தித்தபோது நவசமசமாஜக் கட்சி வலியுறுத்து

மாகாணசபை யோசனைகள் குறித்து ஜனாதிபதி ஜெயவர்த்தனா, தனித்தனியே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

நவ சமசமாஜக் கட்சிப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்கள் ஜூலை 7இல் இடம் பெற்றன. ந.ச.ச குழு டாக்டர் விக்ரமபாகு கருணாரத்தின தலைமையில் ஜனாதிபதியைச் சந்தித்தது. அப்போது இடம் பெற்ற உரையாடல்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.

ஜே. ஆர்: ஜூன் 24 இல் நீங்கள் விடுத்த அறிக்கையில் காணப்படும் கடுமையானவார்த்தைப் பிரயோகங்கள் எதையும் வாபஸ் பெறும் எண்ணம்ஏதும் உண்டா?

ந.ச.ச குழு: அப்படி இல்லை நண்பர்கள் என்ற முறையில் நாம் வரவில்லை. அரசாங்கத்தைக் கவிழ்க்க திடசங்கற்பம் பூண்டு உள்ள புரட்சிக் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் என்ற முறையில் தான் வந்துள்ளோம்.

ஆனால் இனப்பிரச்சினை தீர்வுக்கு வழங்கப்போகும் சலுகைகளை ஆதரிக்க நாம் தயாராக உள்ளோம்.

ஜே. ஆர்: எனக்கு உங்கள் நிலைமை விளங்குகிறது.

தீர்வுக்குரிய புதிய யோசனைகள் போதாது

ந.ச.ச குழு: தமிழர் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தற்போதைய யோசனைகள் போதுமானவையாக இல்லை. அப்படி இருந்தும் அந்தச் சலுகைகளை ஆதரிக்கத் தயாராக உள்ளோம்.

தமிழர் விடுதலை அமைப்புக்களின் நிபந்தனைகளை ஏற்று யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு இலங்கை அரசு முன்வந்தாலும் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தளவில் அரசபடைகளும் தமிழ் விடுதலைப் படைகளும் இருக்கும் நிலைமை தொடரும்.

ஜனநாயக முறைப்படி இதற்கு ஒரு வழிகாண தமிழ் இராணுவத்தைத் தனிப்பிரிவாகக் கொண்ட ஐக்கியப்படுத்தப்பட்ட தேசிய ஆயுதப்படை ஒன்றை அமைக்கவேண்டும்.

ஜனநாயக ரீதியில் ஒற்றுமையை உருவாக்க இனரீதியான ஆயுதப் படை முழு முட்டுக்கட்டையாக இருக்கும். சிறுபான்மையினர் அதில் நம்பிக்கை வைக்கமாட்டார்கள்.

தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக தமிழ்ப்போராளிகளை அரச ஆயுதப்படையில் ஒரு பிரிவாக வைக்க வேண்டியது கட்டாயமாகும்.

தமிழர்களை நிபந்தனை இன்றி நிராயுதபாணி ஆக்கக் கூடாது

நிபந்தனையற்ற விதத்தில் தமிழர்களை நிராயுதபாணியாக்குவதை நாம் எதிர்க்கின்றோம். அப்படிச் செய்தால் சிங்கள வெறிபிடித்தவர்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு இடமளிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழர்களைப் படுகொலைசெய்வதன்மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று சிலர் ஆலோசனை கூறுவதாக ஜனாதிபதியே கூறியிருக்கிறார்.

அப்படியான பயமுறுத்தல்கள் இருக்கும்போது உண்மையான ஐக்கியப் படுத்தப்பட்ட ஆயுதப் படை ஒன்றை நிறுவாது தமிழரை நிராயுதபாணியாக்குவது பொறுப்பற்ற நடவடிக்கையாக அமையும்.

தமிழ்ப்படைப் பிரிவு

ஆயுதப்படையில் உருவாக்கப்படும் தமிழ்ப் படைப்பிரிவு, இனரீதியான வன்செயல்களுக்கு தடையாக இருக்கும்.

ஜனாதிபதி தனது யோசனைகளை இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு இணைவாகத் தயாரித்துள்ளார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

வெளிப்பார்வைக்காவது இந்திய அமைப்பு ஒருபக்கச் சார்பில்லாத மாதிரி தெரிகின்றது.

எல்லா தேசிய இனங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்ட ஆயுதப்படைப் பிரிவுகள் இந்தியாவில் உள்ளன.

இலங்கை ஆயுதப் படையைப் பொறுத்த வரையில் சிங்க, கஜபாகு, கெமுனு என்ற சிங்கள பௌத்த பெயர்களில் தான் ஆயுதப்படைப் பிரிவுகள் உள்ளன.

நாட்டின் அத்திவாரமே ஆயுதப்படைகள்தான் அவை ஒரு பக்கச்சார்பானதாக இருந்தால், அவற்றின் கீழ் வாழ சிறுபான்மையினர் சம்மதிக்கமாட்டார்கள்.

இந்தியக்கொடியில் சக்கரம் உண்டு. மனித முன்னேற்றத்தை அது குறிப்பதாக வாதிடப்படுகிறது. அந்தக் கருத்தில் பார்த்தால் மனித நாகரிகத்தின் சின்னமாக அதைக் கருதலாம் அசோக சக்கரத்துடன் தொடர்புபடுத்திப் பார்த்தால் அதுபௌத்த சார்பாகத் தெரிகிறது; இந்து சார்பாக அல்ல.

தேசியக்கொடியை மாற்றவேண்டும்

எமது கொடியில் உள்ள சிங்கத்தின் சின்னம் பௌத்த சிங்கள ஆரிய சிந்தனையுடன் தொடர்பானதாக உள்ளது. அதே நேரத்தில் ஜனாதிபதி கொடி ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிவப்பு பின்னணியில் சக்கரம் ஒன்று இருப்பதாக அந்தக் கொடி அமைந்துள்து. இது எதனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது? பௌத்த வெறியைக் காட்டுகிறதா? அல்லது மனித எதிர்காலத்தைக் காட்டுகிறதா?

மனித எதிர்காலத்தைக் காட்டுவதாக இருந்தால் இலங்கையின் எதிர்கால தேசியக்கொடியாக அது அமையலாம்.

எப்படி இருந்தாலும் ஜனநாயக தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டக்கூடியதாக தேசியக்கொடியை மாற்றவேண்டும்.

இந்தியாவில் அதிகாரப் பகிர்வு தேசிய இனங்களின் தாயகம் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. பிரதேசங்களும் மாநிலங்களும் அப்படித்தான் அமைந்துள்ளன. இங்கு இன்னும் பரம்பரைத் தாயகம் என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வெறும் பூகோளரீதியான மாகாணப் பிரிவுகள், தமிழர் அபிலாஷைகளை எப்படியும் திருப்தி செய்யப்போவது இல்லை. தேசிய தேவைக்கு ஏற்ப பிராந்தியங்கள் பிரிக்கப்படவேண்டும்.

ஆதிக்கப் போக்கு அற்ற அரசியற் சட்டம்

இந்திய அரசமைப்புச் சட்டம் மதசார்பற்றது. இந்து மதம் பற்றி விசேடமான குறிப்பு எதுவும் அதில் இல்லை. ஹரிஜனர்கள் பற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரும்பான்மை இனம் பற்றி அரசமைப்புச் சட்டத்தில் விசேட குறிப்பு சேர்ப்பது ஜனநாயக விரோதமானது.

அரசமைப்புச் சட்டம், சிறுபான்மையினரினதும் பிற்பட்டோரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமையவேண்டும்; பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாக அமையக்கூடாது.

எப்படி இருப்பினும் இந்திய அரசின் அரசமைப்புச் சட்டம் ஜனநாயகரீதியானது என்பதை நாம் நம்பவில்லை, உண்மையான ஜனநாயக தேசிய ஒற்றுமை அங்கும் இல்லை. அப்படியான ஒற்றுமையை அடைய சமத்துவம், சுயாட்சி, சுயநிர்ணய உரிமை முதலியன ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளில் சேர்க்கப்படவேண்டிய ஐந்து அம்சங்கள் கொண்ட மூன்று கொள்கைகளை நாம் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம்.

நாம் குறிப்பிட்ட 5 அம்சங்கள் பற்றிய திருத்தங்களை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று நாம் நம்பவில்லை. ஆகவே தான் நாம் அரசு யோசனைகளுக்கு விவரமான திருத்தங்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

(அடுத்த வாரம் தொடரும்...)

அரசாங்க அலுவலகங்களில்....

'சிகதி'

உறுதிப்பாடு வேண்டும்

கச்சேரி ஆவணங்கள் இடாப்புகள் பற்றி வாசகர் 'ஆடலரசு' எழுதிய கருத்து வருமாறு தமிழ்ப் பகுதி அரச அலுவலங்களில் மாத்திரம் தான் இடாப்புக்களை ஆங்கிலத்தில் வைத்திருக்கின்றார்கள். தமிழ் மொழி மூலம் கல்வி கற்று தேறிய ஊழியர்களைக் கொண்டு ஆங்கிலத்திலேயே கருமமாற்றும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள் தமிழ் படித்த எழுது வினைஞர்களுக்கு ஆங்கிலம் சரிவர எழுதத் தெரியாது; அவர்கள் ஆங்கிலத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. அத்துடன் சிங்களமும் படித்து தேறினால் தான் வருடாந்தச் சம்பள உயர்ச்சி இடைக்கும். இப்படி விஷயமிருக்கையில் எப்படி இந்த எழுதுவினைஞர்களிடத்தில் வேலையை விரைவில் எதிர்பார்க்க முடியும்.

மற்றும் உள்ளூராட்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனை எங்கும் ஆங்கிலத்திற்கு முதலிடம். எங்கள் அலுவலகங்கள் நினைத்தால் தமிழ்மொழியில் கருமமாற்றலாம். ஆங்கிலம் படித்தவர்கள் தமிழ் வராது என்று சொல்வது சுத்த அபத்தம். யாழ் புதிய கச்சேரி முகப்பை பாருங்கள் ஆங்கிலம் முதல், இரண்டாவது சிங்களம், மூன்ருவது தமிழ். அலுவலகங்களில் உள்ள பதிவேடுகள் தமிழில் இருந்தால் தானே. தமிழ் தெரியாதவர்கள் தமிழ் மாநிலங்களில் கருமம் ஆற்ற முடியாத நிலை வரும். இதற்காக ஆங்கிலம் படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. பல மொழி படித்தாலும் தமிழ் மொழி தாய் மொழியில் தான் கருமம் ஆற்றுவோம் என்ற உறுதிப்பாடு வேண்டும்.

* * *

கண்டி சுகாதார சேவைப்பகுதி திணைக்களத்தின் சிவப்பு நாடா முறையினால் கண்டி ஆஸ்பத்திரி டாக்டர்கள் தங்கள் பெறுமதியான நேரத்தை சென்ற வாரம் கடமையில் ஈடுபடாது வீண் விரயம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்களது கொடுப்பனவுகளை அதன் பின்னர் கொடுக்க முடியுமானால் ஏற்கனவே வழங்கி அவர்களை ஏ நிலையைச் சீர் செய்திருக்கலாம்.

* * *

அடையாள அட்டைகள் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதனால் பல சிரமங்கள் இங்கு உள்ளவர்களுக்கு ஏற்படுகின்றது இந்த அட்டைகளை விண்ணப்பித்த ஒருமாத காலத்திற்குள் கிடைப்பதற்கான முறைகளை சம்பந்தப்பட்ட திணைக்களமும் அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவும் மேற்கொண்டால் பொதுமக்களுக்கு உதவுவதாகும். சில உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் காணாமற் போவதால் அதிலும் பல சிரமம் பொதுமக்களுக்கு.

* * *

சென்ற வாரம் கணக்காளர் நாயகம் இ போ ச பற்றி சமர்ப்பித்த அறிக்கையில் மிகவும் பாரிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். திறைசேரி அதன் சுற்றுநிருபத்தில் கோரியவாறு அசைவுள்ள அசைவற்ற பொருள்களின் பதிவேடு இல்லை எனவும் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களின் நிலையான இருப்பு பற்றியும் எதுவிதமான கணிப்பும் செய்யப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது அரச கூட்டுத்தாபனங்களுக்குப் பொறுப்பான முறையில் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபை இயக்குனர்களை இக் குறைபாடுகளுக்கு உட்படுத்த சட்டங்கள் மேலும் வலுவாக்கப்படுதல் வேண்டும். திறமையற்ற முறையில் நடத்தப்படும் சபையின் இயக்குனர்களை நீதிமன்றங்களுக்கு கொணர்வதுடன் அரசு நிறுத்தாது அவர்களுக்கும் கடும் தண்டனை வழங்கினால் தான் பிறர்க்கும் இது ஓர் உதாரணமாக அமையும். பொதுநிதி மோசடி, பணம் கையாடல், பதவித் துர்ப்பிரயோகம், ஊழல் போன்றவற்றை மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள் சிறு பணியாளர்களைப் பலி போடும் நிலையும் மாற வேண்டும். அரசு இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமா?

கம்பன் கவிவண்ணத்தில் மந்தரையின் பாத்திரம்

பண்டிதர் வி. சீ. கந்தையா B.O.L.

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் மூன்று நாள் கம்பன் விழா நல்லூரில் இப்போது நடைபெற்று வருகிறது.

அதனையொட்டி இலங்கைக் கம்பன் கழக ஆதரவில் வெளியிடப்பட்ட 'கம்பன்' சஞ்சிகையில் பிரசுரமான கட்டுரை ஒன்று இங்கு இடம்பெறுகிறது.

கி.பி 11ஆம் நூற்றாண்டிலே சோழப் பேரரசு சிறப்புடன் விளங்கிய காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படுகின்ற கம்பர், கவிச்சக்கரவர்த்தி என்ற பெரும் புகழ் கொண்டவர்.

அவரது இணையற்ற புலமைச் சிறப்பினாலேயே ''யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை'' என்று கவிஞர் பெருமக்கள் போற்றும் சிறப்பும் அவருக்குக் கிடைப்பதாயிற்று.

கம்பராமாயணத்துள் அயோத்தியா காண்டம் மிக முக்கியமான சில நிகழ்ச்சிகளைக் கொண்டதென்பர்.

மந்தரையின் சூழ்ச்சி—கைகேயி அதனைத் தொழிற்படுத்தும் சிறப்பு—தசரதன் அவலுற்றதுயர்—

மந்தரை சூழ்ச்சியின் முடிவினை இராமன் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளுதல் முதலிய முதன்மையான செய்திகளையுடைய காண்டம் அது.

இராமாயணக் கருப்பொருள்

இந்த முதன்மையான செய்திகளுள்ளும், மிக முதன்மையான கருப்பொருட் செய்தி மந்தரை செய்த சூழ்ச்சி. இராமாயண நூலறிஞர் சிலர் அச்சூழ்ச்சியினையே இக்காவியத்தின் கருவென்று கூடக் கூறுவர்.

அதனால் கருப்பொருளை வெளிப்படுத்தி நின்று செயற்படுத்தும் மந்தரை என்ற கதாபாத்திரமும் மிக முதன்மையான ஒன்ருகவே அமைதல் இயல்பாகும்.

இராமனது வாழ்க்கைப் பாதையின் மாற்றியமைத்தவள் மந்தரை. அவள் செய்த மாற்றம் தான் இராமனது பெரும் புகழை மக்கள் உள்ளம் அறுதேனப் பருக வைத்தது.

தனது செயலால் இராமாயணம் என்ற பெரிய தேரானது இலகுவாக உருண்டு செல்லுதற்கான அழகிய வீதியினை அமைத்துக் கொடுத்த சிற்பியாகத் தோன்றுகிறாள் மந்தரை.

அதனாலேதான் இராமகாதையுள் மிக இன்றியமையாத ஒரு பாத்திரமாக அவளைப் படைத்திருக்கின்றார் கம்பநாடரும்.

அவளது இளமைக் காலத்தில் விளையாட்டுச் செல்வனாக இருந்த இராமன், தனது சுண்டு வில்லில் வைத்து ஏவிய மண்ணுருண்டை மந்தரையினுடைய கூன் முதுகிலே பட்டு, மகளிர் பலருடைய நகைப்பிற்கு அவளை ஆளாக்கிற்றென்றும்—

அதனை மனத்துள் வைத்து இராமன் மீது கறுவு கொண்டிருந்தாளாதலின் இராமனது முடிசூட்டை எப்படியும் தடுத்துவிட வேண்டும் என்று வழி தேடினாள் என்றும் அறிகின்றோம்.

கொடுமனக் கூனி

அதன்படி மந்தரை இயல்பாகவே கொடிய குணம் படைத்தவளே யாகின்றாள் இன்றேல் குழந்தையாகிய இராமனது விளையாட்டுச் செயலைத் தன் மனத்துட் பெரும் பொருளாகக் கொண்டு பழிவாங்க முயலுதல் அவளால் முடியுமா?

அதனால் இராமாயண நூலுள்ளே கொடுமை நிறைந்த தோற்றத்தோடே மந்தரை நமக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றாள்

''நாளைக்கு இராமனது முடிசூட்டு'' எனக் கேட்டு மகிழ்ந்த மக்கள் நகரை அலங்காரம் செய்கின்றார்கள். அவ்வேளை [illegible]

''இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோற் றுன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்'' என்று கம்பர் அவளை இலக்கிய மேடையிலே தோற்றம் செய்விக்கின்றார்.

நல்லோரை நலிந்த இராவணன் செய்த எண்ணிறந்த தீமைகளும் சேர்ந்த ஓருருவம் கூனிக்கு உவமையாகக் கூறப்படுவதென்ருல், அக்கூனியின் கொடுமைத் தன்மையை அளந்து காட்டக் கம்பர் கையாண்ட அளவுகோலின் நுட்பத்தை நாம் எவ்வாறு அளவிடலாகும்!

தொடக்கத்திலே கம்பருக்கும் —

அவரால்வழிநடத்தப்பெற்ற காரணத்தினால் மனப்போக்கில் மாறு (Prejudiced Against) கொண்ட நமக்கும் —

தன் கருத்துக்கொவ்வாதவற்றை அவளிடம் இருந்து கேட்கப் பெற்ற கைகேயிக்கும் மந்தரை மிகக் கொடியவளாகவே காணப்படுகின்றனள்

தனது காவியத்திலே மந்தரையை ஒரு கெட்டவளாக இவ்வாறு நமக்கெல்லாம் அறிமுகம் செய்துவைத்து விட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் கம்பர் மனம் மாறி விடுவதை நாம் பின்பு காண்கின்றோம்.

'தாமொழி மடமான்' ஆக விளங்கிய கைகேயி, மந்தரையினுடைய வார்த்தைகளைக் கேட்ட பின்பு தன்னுள்ளம் திரிபுறுகின்றாள். அதனால் மந்தரையைப் போன்ற நல்லவளும், இனியவளும் அவளுக்கு இல்லையாகின்றது

'எனையுலகத்தவர் இனியை எம்மனுக்கும்''

என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய கைகேயி —

''இரைத்த வேலை சூழ் உலகமென் னொருமகற் கீந்தாய் தரைக்கு நாயகன் தாயினிநீ''

என்று [illegible]

தோன்றுகின்றவள் அவளுக்கு

தனது இராமாயணத்துள்ளே கதாபாத்திரங்களைப் படைப்பதில் கம்பன் காட்டியிருக்கும் திறமைக்கும் இது ஒரு சான்று.

மந்தரை சூழ்ச்சி கம்பராமாயணம் முழுவதற்குமே இன்றியமையாத ஒரு கருப்பொருள் போன்றதென்று கூறினேம். கூனி நினைந்த அந்த வஞ்சனையோ இலகுவானதொன்றன்று: அது ஓர் அரசியற் சூழ்ச்சி.

அரசியற் சூழ்ச்சி

தசரத மன்னனது ஆட்சியைக் கவிழ்த்து, முடியைக் கைப்பற்றித் தான் விரும்பிய வேறொருவனை அரியணை பெறுதற்கான மிகப் பெரிய அரசியற் சூழ்ச்சி அது.

பரிதிகுல மன்னரிடைப் பண்டுதொட்டு நிலவிவந்த அரசவழி மரபினையும், தனக்கேற்றதொரு நற்போக்காக மாற்றியமைக்கும் பெரியதோர் அரசியற் சதி

அதனை அவள் சரிவரச் செய்தல் வேண்டும் திட்டம் இடையிலே தவறிப்போதல் கூடாது. தவறுமானுல், நீண்ட நாளைக்கு நடைபெறும் குற்ற விசாரிப்புக்கெல்லாம் இடம் இருக்கமாட்டாது! மந்தரைக்கு உடனே கொடியதொரு தண்டனை கிடைத்துவிடும் கைகேயி கூறுவது போல், ''நாக்குத் துண்டிக்கப்படுத''லுக்குக் குறைந்த ஒரு தண்டனையாக அது இருக்கமாட்டாது

கம்பரின் கவனம்

ஆதலால், மந்தரை தன்சூழ்ச்சியைக் கைகேயியிடம் வெளிப்படுத்தி அவளைத் தனக்கு உடந்தையாக்க முயன்றபோது அதிலே அவள் சிறிதும் தவறிவிடக்கூடாதே என்பதைக் கம்பர் நன்கு பார்த்துக் கொள்ளுகின்ருர்.

தனது காவியத்துள்ளே, தான் நடத்திக் காட்டுகின்ற அரசியற் சூழ்ச்சியைச் சரியாக நிறைவேற்றி வைக்கவேண்டிய

(7-ம் பக்கம் பார்க்க)

நீத்தார் பட்டியல்

திருமதி சாந்தநாயகம் செல்லையா

இவர் சரசாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் செ. நடராசா நீர்வேலி - முன்னைநாள் பொலீஸ் உத்தியோகத்தர், - (வெற்றிவேல் மனோகரன் கம்பனி), செ. சுப்பிரமணியம் (கொடிகாமம் - முன்னைநாள் பொலீஸ் உத்தியோகத்தர்), செ. மகேஸ்வரன் (ஜப்னா எலெக்றிக்கல்ஸ், ஸ்ரான்லி வீதி), செ. கந்தசாமி (மகேஸ் அன் சன்ஸ், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (2-8-86) சனிக்கிழமை பத்து மணியளவில் சரசாலையில் நடைபெறும்.

செ. மகேஸ்வரன்
(தகவல் தருபவர்)

15-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி கனகமுத்து செல்லப்பா

தோற்றம்: 05-12-1910
மறைவு: 02-08-1971

பண்பான வாழ்க்கைத் துணைவியாய், அன்பான தாயாய், இனிய சகோதரியாய், எல்லோர்க்கும் உறுதுணையாய் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதமடைந்தாள் உத்தமி. அன்றும், இன்றும், என்றும் எங்கள் நினைவில் நீங்காத நல்லாளின் திதி 15-8-86இல்.

செல்லப்பாவும் பிள்ளைகளும், மருமக்களும்.
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 1 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

வெளிநாட்டு நாணயம்	இலங்கையில் (ரூபா சதத்தில்)
ஸ்ரேலிங் பவுண்	41. 23
அமெ. டாலர்	27. 91
இந்திய ரூபா	2. 20
மார்க் (ஜெர்மனி)	13. 19
கனடா டாலர்	20. 00
பிராங் (பிரெஞ்சு)	4. 05
பிராங் (சுவிஸ்)	16 47
அவுஸ். டாலர்	16. 54

REPAIR SERVICE

T.V. ரேடியோ மற்றும் எல்லா வித மின்சார உபகரணங்களையும் திருத்துவதில் சிறப்பான சேவையை நாம் வழங்குகிறோம்.

Dynamic Engineering Ltd,
476 Main Street, Chundikuli, Jaffna.
(Opposite St. Johns College)

சிவப்பயன் சிறக்கும்

சைவநற் திருநெறி

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

பைந்தமிழ் மாந்தரின் சமயம் சிவசமயமாகும். இச் சமயம் காலப்போக்கில் சைவசமயம் என்ற பெயர்த்தாயிற்று இதனைச் சிவமயம் என்ற சொல்லட்டியே வலிமைப் படுத்தும். சிவசமயம் - சைவசமயமாகப் பெயர்ந்து பெயராகியதற்கு ஏது, சிவசமயத்தவரின் தத்துவ நிலை நோக்கிய சிந்தனைப் பேறும், "சிவ" என்ற பேசும் எழுத்தொலிக்குச் "சி" பேசா எழுத்தொலியாம். "சி" என்ற பேசாஎழுத்து 'குரிய 'இ' கர உயிர் எழுத்துக்கு 'ஐ' என்ற உயிர் எழுத்தொலியே போலி எழுத்தொலியாம். இந்தப் போலி உயிராம் ஐகாரத்தை ஏற்ற சகர மெய்யெழுத்தொலி "சை" என்ற உயிர்மெய் எழுத்தொலியாக மலர்ந்தது ஆகவே "சிவ" என்ற பேசும் எழுத்துக்குச் "சைவ" என்பது நேர் ஒத்த போலி எழுத்து என்பது தாமே பெறப்படும். எனவே சிவ என்பதும் சைவ என்பதும் நேர் ஒத்த ஒப்புடைய ஒதுங் மொழி என்பது தெளிவாயிற்று. சிவசமயத்திற்கு நேர் ஒத்த சைவசமயம் சிவமயப் பெற்றியில் போலி இயல்புடையது என்பதை அத் தெளிவு உணர்த்துவதும் ஆயிற்று போலி என்ற சொல் போல் + இ என்று பகுக்கப்படும். போல் — போன்றது. இ- உடையது எனவே போன்றதுடையது போலி என்பது பெறும். போன்றதுடையது எது? அஃதே சைவ என்பதாம். எதற்குப் போன்றதுடையதெனில் சிவ என்பதற்கே என்றே விடையும் அமைவதாகும். இதனாலேயே சிவச் சான்றோர் "சிவமயம்" என்று எழுதுவதை எழுதுங்கால் முதற்கண் கடனாகக் கொண்டனர். இந்தக் கட்டப்பாடே சிவ சமயத்தின் தத்துவக் கருவூலங்களைக் காத்து மூல நிலையை இன்றும் இருத்திக்கொண்டிருக்கிறது. இந்தக்கடமையின் நிலைப்பாடே சனாதன தருமம், வைதிகதருமம் என்றவைகளாகப் பெயர் சொண்டது சனாதனம் என்பது 'என்றுமுள்ளது' என்ற கருத்துடையது இது தோற்றக் காலவரையறை இல்லை என்ற உண்மையை விளக்குவது. இதனையே நாம் "சிவசமயம்" என்று குறித்தோம் வைதிகம் என்பது வேதங்களின் சமயம் என்றாகும். இதனிடமே சைவசமயம் பெறப்படும். இம்முறையிலே சிவ என்பது சைவ என்ற பரிணமம் பெற்றும் நிற்க.

வைதிக தருமத்தில் வகைப்பட்ட சைவசமயம், வேதங்களின் சமயச் சார்புவழிச் சமயமாதலின் அதன் நெறிமுறை நோக்கில் தமிழரின் சனாதனதருமம் தமிழ் மொழியிலே உளப்பட்டதொன்றும், பரிணம வளர்வு நெறியில் குழுநிலை நிலையில் நின்ற சிவசமயம் தேசிய நிலையாசையில் சைவசமயமாகச் சிறப்புறுசையிலேயே வடமொழியின் நிலைக்களம் அதனிடத்து படிதலாயிற்று. காரணம் தென்னவராம் தமிழர் வடவராகத் தலைப்பட்டமையாம். அக்காலம் வேற்றவர்கள் வடநிலத்துச சிந்துவெளி மண் பரப்பில் கால்வைக்காத காலம், இக்காலத்தைத் திரிபுரமெரி கொண்ட காலப் பகுதிக்கு முற்பட்டதாகக் கொள்ளலாம். அந்த வடநிலத் தமிழர் ஆங்குப் புகுந்த வேற்றவராம் ஆரிய இனத்தவரோடு கலப்புற்று ஆரியத் தமிழராய்த் கலைப்பட்டு சிவ சமயச் சிந்தனைகளை அவர் மொழியில் ஆக்கி நிலைநாட்டும் நீர்மையிலே தென் (தமிழ்) மொழிச் சிவசமயம் வடமொழி (சமஸ்கிருதம்)ச் சிவசமயமாகப் பரிணமித்தது. காலப் போக்கில் அந்த வடமொழி ஆரியர் அந்தச் சிவசமயக் கோட்பாடுகளைத் தம்முடை சிந்தனையின் கருவியாகக் கொண்டு, தென்புலம்

(7ஆம் பக்கம் பார்க்க)

கடல் கடந்த கடிதம்

பாலுக்குப் பாலகனே புறப்படு!

தம்பி,

பால்மாப் பெட்டிகள் வரவில்லையெனிற் பரிதவிக்கும் பாலர்களைப்பற்றி எழுதியிருந்தாய்! எமக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்!

பால்மா—அதற்குப் பிரசாரம் பிரமாதம்! போட்டிகள், வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்கள்! எடுபட்டுவிடுகிறோம். ஏமாந்துவிடுகிறோம்!

பாலர்களென்ன, பெரியவர்களே பெட்டிப் பாலுக்கு அடிமைகள்! "சுலபமாகக் கிடைக்கின்றது—சுகாதாரமாகக் கிடைக்கின்றது!"—இது அவர்கள் வாதம்! எங்கிருந்து வருகிறது? அவர்களுக்குக் கவலையில்லை!

பாலைப் பெருக்கிச் சுகாதாரமாக வழங்க—சுலபமாக வழங்க எம்மவர்களால் முடியாதா? வேலையில்லையென ஏங்கித் தவிப்பவர்கள், தம்பி, இனிமேல் அப்பாலே போகமுடியாது! எனவே இப் "பாலேயே" சிந்திக்கட்டும்!

பசுவைத் தெய்வமாகப் போற்றுபவர்கள் நாம்! மாடு மேய்த்தவனையே—கண்ணனையே—கடவுளாகக் கண்டவர்கள் நாம்! இறைவனை மாடுமேய்ப்பவனுக்கு ஒப்பிடுகிறது இருக்குவேதம்! இருந்துமென்ன? படித்தவன் மாடுமேய்க்கலாமா? பீத்தற் பெருமையாற் சீரழிகிறோம்!

கால்நடை வளர்ப்புக்குத் திணைக்களம்—கால்நடை மருத்துவர்கள் — கடனுதவி — செயற்கை முறைச்சினைப்படுத்தல்— இன்னும் பலப் பல! பாலைத்தான் காணோம்!

மேலைநாடுகளில் — கால்நடை வளர்ப்பில் எவ்வளவு ஆராய்ச்சி! எவ்வளவு நூல்கள்! காற்சட்டை போட்டவர்களும், தம்பி, கால்நடைகளாற் காசு குவிக்கிறார்கள்!

பொருத்தமான தொழில்நுட்பத் தெளிவுடன் கிராமங்கள்தோறும் பாற்பண்ணைகள் — சீரான, சுகாதாரமான விநியோகம் - நீரிற் பால் கலக்கும் வியாதிக்குப் புது மருந்துகள் - புதிய பாலுணவுப் பொருள்கள்!

கேட்கவே இனிக்கிறதல்லவா, தம்பி, திட்டத்தை நடைமுறைப்படுத்துவது யார்? கண்காணிப்பது யார்?

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான் பள்ளிகொள்கிறார்! அதாவது; செய்யவேண்டியவர்கள் செய்யவில்லை! நிர்வாக இயந்திரம் காலத்திற்கும், தேவைக்கும் ஏற்றதாக இல்லை!

பாலுக்கழுத பாலகனே இன்று வளர்ந்துவிட்டான்; புதிய இரத்தம் - புதிய அமைப்புகள்- புதிய முயற்சிகள்! பஞ்ச பாண்டவர்கள், பிரிந்திருந்தாலும், அஞ்ஞாத வாசத்தில் சோம்பியிராது ஆளுக்கொரு தொழில் செய்யவில்லையா?

பாலகனே! புறப்படு! பாற்கடல் ஈந்து விடு!!

அன்புடன்
- சிவா—

வாழ்வின் உயர்வுக்கு

உண்மையோடு கவனமும் கட்டாயம் தேவையானது

ஆசிரியரைக் கண்டால் அந்த வகுப்பு மாணவர்களுக்குக் கிலிப் பயம் மேலதிக வகுப்புக்கள் வைத்தால் எல்லா மாணவர்களும் சமுகமளித்தே ஆக வேண்டும் வகுப்புக்கு வரத் தவறும் மாணவனை தவறாது கண்டுபிடித்து தண்டித்து விடுவார் வகுப்பு ஆசிரியர்.

மேலதிக வகுப்புக்குச் சமுகமளிக்காத ஒரு மாணவனைப் பார்த்து ஆசிரியர் காரணம் கேட்டார்.

அந்த மாணவனைப் பார்க்கும்போது மிகவும் விநோதமாக இருந்தது. மெலிந்த நெடிய உடல், அகலமான மூக்கு, அகன்ற காதுகள். எல்லா மாணவர்களும் அவனை சதா கேலி செய்வார்கள் இதனால் அவன் ஒதுங்கியே இருப்பான் அவன் கூறப்போகும் காரணத்தை எல்லாரும் மிகுந்த ஆவலோடு கேட்கக் காத்திருந்தார்கள்.

'வீட்டில் கடிகாரம் கிடையாது. வானம் இருண்டு கிடந்ததினால் நேரம் போனதும் தெரியவில்லை. அப்பாவுக்குச் சுகம் இல்லை அவருடைய பணிவிடைகளைச் செய்து விட்டு பாடசாலை வகுப்புக்கு வந்தபோது, வகுப்பு முடிந்து விட்டது" என்று மிகவும் பணிவோடு பதிலளித்தான்

ஆயினும் ஆசிரியர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவனுக்குத்தண்டனை விதித்தார் அவன் மிகவும்குன்றிப்போனான்' வேதனைப்பட்டான். தண்டனை கிடைத்து விட்டதே என்பதற்காக அவன் கலங்கவில்லை. உண்மை பேசியும் தண்டனை கிடைத்து விட்டதே; ஆசிரியர் தன்னைப் பொய்க்காரன் என்று எண்ணிவிட்டாரே என்று எண்ணி வருந்தினான். உண்மை உயர்வளிக்காத காரணம் என்ன என்று ஒரு பக்கத்தில் இருந்து அவன் சிந்தனை செய்தான்.

"ஒருவன் உண்மை மட்டும் சொன்னால் போதாது. உண்மையோடு கவனமாகவும் இருக்க வேண்டும்." என்று தீர்மானித்தான்.

அன்று தொடக்கம் அவன் உண்மையோடு கவனமாக வாழ்ந்து வந்தான். உலகம் அவனை மதித்தது. உன்னத மனிதனை ஏற்றுக் கொண்டு மதிப்பளித்தது.

அவர் —

எமது மனதில் நிறைந்துள்ள காந்தி மகாத்மா தான்.

—குகா—

சார்ளி சாப்ளினுக்கு வந்தது ஒரு சந்தேகம்

இருபதாம் நூற்றாண்டில் மிகப்புகழ் பெற்ற சார்ளி சாப்ளினைப் பற்றிப் பல கதைகள் உண்டு. அவரைப் போலவே வேஷம் போட்டுத் தத்ரூபமாக நடிப்பவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாக ஒரு போட்டி ஏற்பட்டது. அதிசயம் என்னவென்றால், சார்ளி சாப்ளினே அதற்குப் போட்டியிட்டார். அந்தப் போட்டியில் அவருக்கு இரண்டாம் பரிசுதான் கிடைத்தது.

மற்றொரு சம்பவம் இது இன்னும் வேடிக்கையானது. அதை அவரே சொல்லியிருக்கிறார். 'பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் நியூயோர்க்கைச் சேர்ந்த ஒரு கடைத் தெருவில் போய்க்கொண்டிருந்தேன். கூட்டம் முண்டியடித்தது நான் கூட்டத்தில் நுழைந்து பல கடைகளில் சென்று தேவையான பொருள்களை வாங்கினேன். பிறகு காரில் ஏறி வீட்டுக்குச் சென்றேன்

பொருள்களை எல்லாம் எடுத்து வைத்து விட்டு சட்டை பாக்கெட்டைப் பார்த்தேன். அடடே என்ன ஆச்சரியம். கோட்டில் பாக்கெட் ஒன்றில் மிக்க விலை பெறும் கடிகாரம் ஒன்று இருந்தது நான் விழிப்போடு எல்லாப் பொருள்களையும் வாங்கினேன் நிச்சயமாகக் கடிகாரத்தை நான் வாங்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அப்படியிருக்க இந்தக் கடிகாரம் எப்படி என்

(7 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் பிரச்சினை: ஒப்பந்தங்களும் தீர்வு முயற்சிகளும்

அரசின் அதிகாரங்களையே புதிய யோசனை வலுவாக்கும்

(சென்றவாரத் தொடர்)
பகுதி IV

தமிழ் மக்கள் உரிமைக்கிளர்ச்சி செய்த பொழுது கிளர்ச்சியாளர்களுடன் சம்பந்தமில்லாத தமிழ்ப் பொது மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் 1956 ஆம் ஆண்டு கல்லோயாவில் நடைபெற்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான இத்தகைய வன்முறை நாளடைவில் வலுப்பெற்றது. அரச பொலீஸ், ஆயுதப் படையே தமிழ்ப் பொது மக்களை நாளாந்தம் கொடுமைப்படுத்தியும் கொலை செய்தும் வருவது இப்பொழுது நாளாந்த சம்பவமாகிவிட்டது.

யாழ்ப்பாண நூலகத்தைப் பொலீஸ்படையினரே எரித்தார்கள் என்பதை ஜனாதிபதியே ஒத்துக்கொண்டுள்ளார்.

இனவிகிதாசாரமும் இணைப்பு 'சி'யும்

1983 ஆம்ஆண்டின் வன்முறையைத் தொடர்ந்து இந்தியாவின் துணையுடன் தயாரிக்கப்பட்ட இணைப்பு 'சி' என்ற ஆவணத்தில் அரசாங்கப் படைகளுக்கு ஆட்கள் சேர்க்கும் பொழுது படைகளில் விகிதாசார அடிப்படை பேணப்பட வேண்டுமென்றும் -

வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களில் உள்ளூர் பாதுகாப்புக்காக நிறுவப்படும் பொலீஸ் படையில் அப்பிராந்தியங்களின் இன விகிதாசாரம் பேணப்படவேண்டுமெனவும் குறிப்பிடப் பட்டிருந்தது

ஜனாதிபதியின் தற்போதைய திட்டத்தில் பொலீஸ் மற்றும் ஆயுதப்படைகளில் இன விகிதாசார தெரிவிற்கிடமில்லை.

மாகாணசபையும் பொலீஸ் பிரிவும்

முழு இலங்கைக்கும் ஒருங்கிணைந்த பொலீஸ் படையே இருக்கும். அதில் தேசியப் பிரிவு - மாகாணப் பிரிவு என்ற இரு பகுதிகள் இருந்தாலும் பொலீஸ் மா அதிபர் தொடக்கம் உதவிப் பொலீஸ் சுப்பிரின்டென்ற் வரை தேசியப் பிரிவை சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

மாகாண உதவிப் பொலீஸ், சுப்பிரின்டென்ற், பிரதம இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், உதவி இன்ஸ்பெக்டர், சார்ஜன்ற், கான்ஸ்டபிள் ஆகிய பதவி வகிப்பவர்களே மாகாணப்பிரிவை சேர்ந்தவர்களாயிருப்பர்.

உதவி பொலீஸ் அதிபர் தொடக்கம் பிரதி பொலீஸ் மா அதிபர் வரை அனைவரும் ஒவ்வொரு மாகாணத்திலும் தேசிய பிரிவைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

மாகாணப் பொலீஸாரின் எண்ணிக்கையும் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படும்.

மாகாணப் பொலீஸாருக்கு வழங்கப்படக்கூடிய ஆயுதம். வெடிமருந்து ஆகியவற்றின் தன்மை, தொகை யாவும் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவாலேயே தீர்மானிக்கப்படும்.

செங்கோல்

இவர்களுக்கான பயிற்சிக்கும் இலங்கை அரசே பொறுப்பானதாக இருக்கும் மாகாண நிர்வாகம் ஜனாதிபதியின் சம்மதத்துடன் மேலதிக பயிற்சி அளிக்கலாம்.

பொலீஸ் படையும் அதிகாரங்களும்

ஆகவே பொலீஸ்படை முற்றுமுழுதாக இலங்கை அரசின் படையாக இருக்கும். அதேவேளை அப்படையின் கீழ்மட்ட ஊழியர்களை மாகாண சபை நியமிக்க- அவர்கள் இலங்கை அரசு நியமிக்கும் மேலதிகாரிகளின் கீழ் பணி புரிவர்.

ஒரு மாகாணத்தில் ஒழுங்கு பேணும் பொறுப்பு தேசிய பிரிவைச் சேர்ந்த பிரதி பொலீஸ் மா அதிபருக்கு இருக்கும். அவ்விடயத்தில் அவர் மாகாண முதல் அமைச்சரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பார். அவசர காலநிலையின்போது ஜனாதிபதி இவ்வதிகாரங்களையும் தாமே மேற்கொள்ளலாம் என்பது மட்டுமல்ல- அத்தகைய அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படாமலே - ஜனாதிபதி பொலீஸ் படையின் தேசியப்பிரிவை மட்டுமல்லாமல்- ஆயுதப்படையினரின் எப்பகுதியினரையும் எந்த மாகாணத்திலும் சேவைக்கு அழைக்கலாம் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பின் பொலீஸ் மா அதிபரே எந்த மாகாணத்திலும் பொலீஸ் படையின்தேசியப்பிரிவை கடமைக்கு அமர்த்தலாம்.

சட்டமா அதிபர் அல்லது பொலீஸ் மா அதிபர் பொது நன்மை காரணமாக குற்றம் பற்றிய விசாரணைகள் பொலீஸ் படையின் தேசியப் பிரிவே கையாள வேண்டுமெனக் கருதுமிடத்து மாகாண முதலமைச்சருடன் ஆலோசனை நடத்தி எந்த மாகாணத்திலும் குற்றவியல் விசாரணையை தேசியப் பிரிவுப் பகுதியைக் கொண்டே செய்விக்கலாம்.

இவை உள்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆக இலங்கைக்கு ஒரு பொலீஸ்படை இருக்கும். அதில் கீழ்மட்ட ஊழியர்களை அரசினால் வரையறுக்கப்பட்ட திட்டங்களுக்கமைய மாகாண பொலீஸ் கமிஷன் நியமிக்கலாம்.

அரசின் மேலாதிக்கம்

இந்த மாகாண கமிஷன் உறுப்பினரில் ஒருவர் அரசினால் நியமிக்கப்படும் அம்மாகாண பிரதி பொலீஸ் அதிபர். மற்றவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுபவர். மூன்றாமவர் மாகாண முதலமைச்சரால் நியமிக்கப் படுபவராவர். எனினும் இக் கமிஷன் அல்லது ஆணைக்குழுவிலும் அரசின் மேலாதிக்கமே நிலவும்.

பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தமோ - டட்லி - செல்வா ஒப்பந்தமோ உள்நாட்டு பாதுகாப்பு. சட்டம் ஒழுங்கு ஆகியவை பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆனால் இணைப்பு சி' இதைப்பற்றிக் கூறுகிறது.

அதன்படி உள்நாட்டுச் சட்டம், ஒழுங்குபேணல், நீதி நிர்வாகம் ஆகியவை பிரதேச சபைக்குரியன வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பொலீஸ் படையின் ஆளணி அங்குள்ள இன விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் அதாவது இணைப்பு 'சி' உள்நாட்டுப் பாதுகாப்பு விடயங்களில் தமிழ் மக்களுக்குக் கொடுத்த பாதுகாப்பு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் திட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது.

பண்டா - செல்வா ஒப்பந்தத்திலும் - இணைப்பு 'சி' யின் ஏற்பாடுகளின் படியும் பிரதேச சபைகளுக்கு கடன் பெறும் அதிகாரம் பொதுவாக வழங்கப்பட்டது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் திட்டத்தின்படி வெளிநாட்டுக் கடன் அல்லது கொடை பிறிதாக்கப்பட்டு அத்தகைய கடன் அல்லது கொடை பெற அரசாங்க அனுமதி வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

மாகாணசபையின் ஆயுட்காலம்

மாகாண சபைகளின் ஆயுட்காலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்துடன் இணைந்திருக்கும் நாடாளுமன்றம் கலைக்கப்படும். பொழுது மாகாணசபையும் கலைக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு நடக்[illegible]

(7 ஆம் பக்கம் பார்க்க)

மலையகத் தமிழர்கள் தலைமை:

தொண்டமானுக்கு ஆபத்தா?

அமைச்சர்தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பதவிக்கு ஆபத்து உருவாகியுள்ளதாம்.

காங்கிரஸின் இளைஞர் மட்டத்திலிருந்தே 77 வயது நிரம்பிய திரு தொண்டமானுக்கு இந்த ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

30 ஆண்டுகளுக்கு மேலாக திரு. தொண்டமான் காங்கிரஸின் தலைவராக அசையாமல் இருந்து வருகிறார்

பிரஜா உரிமை சட்டமூலம் கொண்டு வரப்பட்ட வேளையில் மலையகப் பகுதியில் உருவான கலவரங்கள் திரு தொண்டமானின் தலைமைப் பதவிக்கு ஒரு சவாலாக உருவெடுத்தது.

காங்கிரஸ் தலைவரின் உத்தரவுகள் மலையகத்தின் பல பகுதிகளில் ஏற்றுக் கொள்ளப்படாத நிலைமை அச்சமயம் தோன்றியது

எப்படியோ பின்னர் நிலைமை சமாளிக்கப் பட்டது.

அண்மையில் பூண்டுலோயாப் பகுதியில் ஏற்பட்ட கலவரங்கள் திரு. தொண்டமானின் தலைமைத்துவத்துக்கு மீண்டும் சவாலாக வந்தன.

இக்கலவரங்களின் போது திரு தொண்டமான் வெளிநாட்டில் இருந்தார் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, வேலைநிறுத்தஞ் செய்து வந்த தமிழ் தோட்டத்தொழிலாளர்களை மீண்டும் வேலைக்குத் திரும்பும்படி 'கட்டளை' பிறப்பித்தார்.

ஜூலை 9 இல் கட்டளை பிறப்பிக்கப்பட்டது தொழிலாளர்கள் 'கட்டளை' யை ஏற்று வேலைக்குத் திரும்பவில்லை 4 தினங்களுக்குப் பின்னரே ஜூலை 13 இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுமார் 10.000 தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பினர். இதனைத் தொடர்ந்து திரு. தொண்டமானின் 'பிடி' யில் இருந்து மலையகத் தமிழர் விலகிச் செல்கின்றனரா? இக்கேள்விதான் இப்போது எழுந்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் 'தலைமுறை இடைவெளி' தான் காரணம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

சித்தாந்த வேறுபாடு என்று இன்னொரு சாரார் கூறுகின்றனர்.

திரு. தொண்டமானின் தலைமைக்குச் சவால் இருக்கத் தான் செய்யும் ஆனால் அவரைத் தலைமைப் பதவியில் இருந்து வெளியேற்றுவது கஷ்டமான காரியம்—

இப்படிக் கொழும்பில் இருந்து வெளியாகும் 'லங்கா கார்டியன்' ஆங்கில சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தாட்சர் இலங்கைக்கு பின்கதவால்

உதவி செய்வதாக லண்டன் இதழ் தகவல்

கொழும்பு, கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, இலங்கை இனப்பிரச்சினை மோதல் சம்பந்தமான தனது நிலைப்பாட்டை பிரிட்டன் மீள்பரிசிலனை செய்யத்தொடங்கி உள்ளது

எயர் லங்கா விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்தவர்களில் 3 பேர் பிரிட்டிஷ் உல்லாசப் பிரயாணிகள்

தனிநாட்டுக் கோரிக்கை குறித்து உலகின் கவனத்தை ஈர்க்கவே தமிழர்கள் விமானத்தைத் தகர்த்தனர். இதை அவர்கள் செய்துவிட்டார்கள். ஆனால் நிச்சயம் பின்னர் கவலைப் படுவர்.

ஏனைய தீவிரவாதிகள் போன்று இவர்களும் சர்வதேச தீவிரவாதிகள் தான் என்ற நினைப்பை இந்த [illegible] திருமதி தாட்சரின் மனதில் ஊன்றிவிட்டது.

அமைதிப்போக்கு

இது காலவரை இலங்கைப் பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசு அமைதிப் போக்கையே கடைப்பிடித்து வந்தது

ஏற்கனவே இந்தியாவுடன் கொண்டுள்ள சீரற்ற ராஜதந்திர உறவுகளை மேலும் மோசமாக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்று புதுடில்லியில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் விடுத்த ஆலோசனைக்கு இணங்கவே, பிரிட்டிஷ் அரசு இந்த அமைதிப்போக்கைக் கடைப்பிடித்து வந்தது

"பின்கதவால்' உதவும் திருமதி தாட்சரின் திட்டம்

இத்தலைப்பில் கிரிஸ் ரொபர் டொர்வின் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஜூன் முதலாம் திகதி வெளிவந்த 'ருடே' என்ற லண்டன் நாளிதழில் பிரசுரமாகியது.

அதன் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.

தமிழ் நாட்டில் உள்ள 5 கோடி தமிழரின் செல்வாக்குப் பற்றி ராஜீவ் காந்தி அரசு கவனம் எடுக்கத்தான் வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் வெளிப்படையான முறையில் பிரிட்டன் ஈடுபடுவதை, இந்தியாவின் செல்வாக்குக்கு ஏற்படும் தலையீடாகவே பிரதமர் ராஜீவ்காந்தி கருதுவார்.

ஆனால் பிரிட்டிஷ் அரசின் நிலைப்பாட்டில் தீவிரமான மாற்றம் ஏற்படவுள்ளது

டோக்கியோ உச்சி மாநாடு. இஸ்ரவேல் ஆகிய இடங்களில் தீவிரவாதத்துக்கு எதிரான பிரசாரத்தில் திருமதி. தாட்சர் ஈடுபட்டார்.

அந்த அடிப்படையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு சில உதவிகளைக் கொடுக்க திருமதி. தாட்சர் தயாராகிறார். இந்த உதவிகள் இராணுவ ரீதியானதாக இருக்கமாட்டா. ஆனால் சிவில் வேலைகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய தானஉதவியாகஇருக்கும் அதன்மூலம் இராணுவ உபயோகத்துக்கு அந்த உதவிகள் வழிவகுக்கும்.

திருமதி தாட்சரின் புதிய கொள்கைப்படி, தீவிரவாதம் எங்கு தோன்றினாலும் தீவிரவாதம்தான்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இருந்த எயர்லங்கா விமானம் குண்டுவெடிப்பால் சிதறிய நாளில் இருந்து தமிழர் தீவிரவாதம் உள்நாட்டு விவகாரம் என்ற அந்தஸ்தை இழந்து விட்டது.

குண்டு வெடிப்பினால் எயர்லங்கா விமானம் சிதறும்வரை, பிரிட்டன் மறுத்துவந்த உதவிகளை மட்டுமன்றி, அதன் அனுதாபத்தையும் ஊக்கத்தையும் திரு ஜெயவர்த்தனா பெறப்போகின்றார்.

பண்பை எங்கே பழகலாம்?

அது அடர்ந்த காடு. அந்தக் காட்டை அடுத்த ஒரு சிறிய ஊர். அக்காட்டின் வழியே ஒரு வியாபாரி நடந்து வந்து கொண்டிருந்தார். வெயில் அதிகமாயிருந்தமையினால் களைத்துப் போனார்.

கையிலிருந்த மூடையைக் கீழே வைத்து விட்டு இளைப்பாற இடந் தேடலானார். ஓர் அழகான மாமரம் அவர் கண்ணிற்பட்டது. பச்சைப் பசேலென்று இலைகளைப் பரப்பி அது வளர்ந்திருந்தது.

நடந்த களை தீர அந்த மாமரத்தின் கீழே படுக்கலாம் என எண்ணிய வியாபாரி மரத்தண்டை வந்தார். தோளிலிருந்த துண்டை எடுத்துத் தட்டினார். அவ்வளவுதான். மரத்தின் மேலிருந்து யாரோ கோபமாகத் திட்டுவது கேட்டது.

'அடே! மடப்பயலே, யாரடா நீ? எங்கே வந்தாய்? இரு, இரு உன்னை ஒரு கை பார்க்கிறேன். ஆட்டுக்கறி ஆறு ரூபா, கோழிக்கறி பத்து ரூபா. ஏண்டா முழிசிறாய்'

வியாபாரி திகைத்துப் போய் அண்ணாந்து பார்த்துப் பேயோ பிசாசோ என்று பயந்து நடுநடுங்கித் திகில் பிடித்தவர் போல் மூடையைத் தூக்கிக் கொண்டு ஓடினார்.

ஓடிப் போனவர் இன்னொரு மரத்தின் அடியில் நின்று அந்த மரத்தைத் திரும்பிப் பார்த்தார். மா மரக் கிளையிலே ஒரு கிளி அமர்ந்திருந்தது. பட்டுப் போன்ற மேனி. பவளம் போன்ற வாய். உடம்பெல்லாம் வர்ணம். அந்த அழகிய கிளியிடமிருந்தா அப்படியான வார்த்தை ? — இப்படி ஒரு பேச்சா

இன்னொரு மரத்தடிக்கு வந்துவிட்ட வியாபாரி கீழே உட்கார்ந்தார் அங்கேயே படுத்தும் விட்டார் மேலே ஓர் இனிமையான குரல் கேட்டது.

'யாரு, வியாபாரியா? வாருங்கள். நன்கு களைத்துப் போய் இருக்கிறீர்கள்! உட்காருங்கள். மோர் சாப்பிடுகிறீர்களா, இல்லை சூடான காப்பி தரட்டுமா' என்ற இனிய சொற்கள் வியாபாரியை வியப்பிலாழ்த்தின.

அதுவும் ஒரு கிளிதான். அதே போன்று தான் இதுவும் கொள்ளை அழகுடன் காட்சி தந்தது. ஆனால் பேச்சில்தான் எத்தனை இனிமை, எத்தனை குழைவு!

'ஏ. கிளியே! சற்று முன் அந்த மரத்தின் கீழே படுத்தேன் அந்த மரத்திலும் உன்னைப் போல் ஒரு கிளி அதன் பேச்சைச் சகிக்க முடியவில்லை. நீயோ அதற்கு எதிர்மாறாக உபசரிக்கின்றாய். என்ன இது?' என்றார் வியாபாரி.

கிளி பேசியது.

'வியாபாரியாரே! நாங்கள் இரண்டு பேரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். நான் அண்ணா. அவன் தம்பி. ஒருமுறை எங்களிருவரையும் ஒரு வேடன் பிடித்துக் கொண்டு போய் சந்தையில் விலை கூறி விற்றான் என்னை ஒரு பெரியவர் வாங்கினார் அவரிடம் நல்லவர்கள் - பெரியவர்கள் வருவார்கள் அதனால் நான் நல்ல வார்த்தைகளைப் பழகிக் கொண்டேன்

அப்படியே இறைச்சி வியாபாரிக்கு விலைப்பட்டான். அவன் பேசும் பேச்சுக்களை அவன் பழகிக் கொண்டான். நாங்கள் எப்படியோ தப்பி மீண்டும் வந்து விட்டோம். இருந்தும் அவரவர் சேர்ந்த பழக்கம் 'அப்படி' என்று விளக்கமாகப் பதிலுரைத்தது

வியாபாரி நகைத்தபடியே, 'கிளியே! உனது பேச்சிலிருந்து நாம் ஒன்று அறியக் கிடைக்கின்றது. நாங்கள் யாருடன் பேசிப் பழகுகின்றோமோ அவர்களின் பழக்க வழக்கங்கள் தான் எமக்கும் வரும். நல்லவர்களோடு சேர்ந்தால் நற்பழக்கமும் நல்ல வார்த்தையும் நமக்கு வரும். கெட்டவர்களோடு சேர்ந்தால் கெட்ட பழக்கமும் தீய பேச்சும் தான் வரும்

''ஸ்ரீ''

மூளைக்குவேலை

சென்ற வார சஞ்சீவியில் கொடுக்கப்பட்ட மூளைக்குவேலை என்பதன் விடையைக் கண்டுபிடித்து விட்டீர்களா?

இதோ சரியானவிடை.

முதலில் படகிலே ஆடு ஒன்றை மட்டும் ஏற்றிக் கொண்டு மறுகரைக்குச் செல்கிறான். அப்போது புலியும் புல்லும் இக்கரையில் இருக்கும். பின்பு புல்லுக்கட்டுடன் போய் அதனை அங்கு வைத்துவிட்டு ஆட்டை மறுபடியும் படகில் ஏற்றி வந்து இக்கரையில் விட்டு விட்டுப் புலியை ஏற்றிச் செல்வான் மீண்டும் வந்து ஆட்டையும் கொண்டுபோகலாம்

புலியும் ஆட்டைத் தீண்டாது. ஆடும் புல்லைத் தின்னாது இப்போது புரிகிறதா?

குயிலோசை

குயிலே குயிலே கூவாயோ
கொஞ்சும் மொழியில் பேசாயோ
இசையே இசையின் இன்னமுதே
இணையே உன்னிசைக் கில்லையென்பேன்
வீசுந் தென்றல் சுமந்து வரும்
வேய்ங் குழல் நாதம் உனதென்பேன்
வையம் மகிழும் உன்னிசையால்
வசந்த கால நிறைவும் வரும்

அனுப்பியவர்; ந ஸ்ரீசத்திய நாராயணன்
யாழ் இந்துக் கல்லூரி

விடுகதைகள்

1. ஊருக்கெல்லாம் ஒரே விளக்கு
2. சின்னக்கிணற்றிலே கிண்ணம் தண்ணீர்.
3. உயரக் கிளையில் உரல் கட்டித் தொங்குகிறது.
4. கழுத்துண்டு, தலை இல்லை; கை உண்டு, விரல் இல்லை; உடல் உண்டு, உயிரில்லை;
5. ஊசி முனையில் ஒய்யார சங்கீதம்.

விடைகள்

5 கிராமபோன்
4. சட்டை
3. பலாப்பழம்
2. இளநீர்
1. சூரியன்

சி. சாயினி
தெல்லிப்பழை.

சிந்தனைக்கு

* பெண்களின் கண்ணீர் எப்போதும் பெறுமதியை விட அதிக விலை போகிறது
— ஸ்பானிய பழமொழி

* திருமணம் தும்மல் போன்றது. எப்போது வருமென சொல்ல இயலாத விடயம் இது
— ரஷ்யப் பழமொழி

* ஒரு நல்ல பெண்ணின் காலடியில் போலிப் பழிச்சொற்கள் மடிகின்றன.
— ஸ்பானிய பழமொழி

* அழகிய பெண் ஆனந்தம் அடைந்தால் பணப்பை கண்ணீர் விடத் தொடங்கும்.
— ஆங்கிலப் பழமொழி

தொகுப்பு - செல்வா

இடுப்புவலி போக

பாலையும் இஞ்சிச் சாற்றையும் கலந்து வெல்லத்தையும் நெய்யையும் அளவாகக் கலந்து கரைத்து திப்பிலிப் பொடியையும் சேர்த்து உட்கொண்டால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வரும் வயிற்றுவலி இடுப்பு நோய்கள் வரமாட்டா *

எமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்குவோம்

இந்த 20ஆம் நூற்றாண்டிலே அநேகமான பெண்கள் தொழில் புரிவதையே விரும்புகிறார்கள் சிலர் கஷ்டத்தின் காரணமாக தொழில் புரிகிறார்கள். இன்னுஞ் சிலர் பொழுதுபோக்கிற்காக தொழில் புரிகிறார்கள். படித்த பல பெண்களும் தொழில் கிடைக்காமையினால் வீட்டிலே முடங்கிக்கிடக்கிறார்கள்.

இன்றுள்ள சூழ்நிலையில் பெண்கள் வேலைக்குப்போய் வருவதே பெருங்கஷ்டமாக உள்ளது போக்குவரத்துச் சீர்கேடு, அசம்பாவிதங்கள் என்பன நாட்டில் தலைதூக்கியுள்ளன ஆதலால் நாங்கள் வீட்டிலிருந்து கொண்டே உழைத்து முன்னேறலாம் இப்போது வீட்டுக்கு வீடு பொருளாதாரக் கஷ்டங்கள் உண்டாகி உள்ளன

ஒருபெண் வாழ்நாள் முழுவதும் பிறரை நம்பி வாழமுடியாது. தன் சொந்த முயற்சியினால் முன்னேற முயற்சிக்க வேண்டும் அதிகமான ஆண்கள் வீட்டிலிருப்பது குறைவு காலையிலே வெளியில்போனால் மாலையில்தான் வீடு திரும்புவார்கள் அதைப் பயன்படுத்தி பலபெண்கள் ஒன்றுகூடி ஊர் வம்புகளை இழுத்து சுரட்டை அடிப்பார்கள் அவை சில நேரங்களில் பெரிய பிரச்சினையாக உருவெடுப்பதும் உண்டு

இவற்றை எல்லாம் தவிர்க்கவே நாம் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக்க வேண்டும் தையல் வேலை, வயரில் பை பின்னுதல், பொம்மைகள் செய்தல்(கழிவு கடதாசி முதலிய கைவேலைகளைச் செய்யலாம் இவற்றை விட சமயலோடு தொடர்புடைய பல உணவுப் பண்டங்களை செய்து விற்பனை செய்யலாம்.

பொதுவாக இப்போது வெயிற் காலமாதலால் பலவிதமான வற்றல்களைச் செய்து பைகளில் அடைத்து சந்தைப்படுத்தலாம்

அவித்த மிளகாய் வற்றல், மோர் மிளகாய் வற்றல், வாழைப்பூ வடகம், வேப்பம்பூ வடகம் முதலியனவும், பயற்றங்காய், பாவற்காய், கத்தரிக்காய், போஞ்சி முதலிய மரக்கறி வகையிலும் வற்றல் செய்யலாம்

செய்முறை

* வாழைப்பூ வடகம்

5 வாழைப்பூ
½ கிலோ உழு பருப்பு
10 செத்தல் மிளகாய்
பெருஞ்சீரகம், உப்பு
(தேவையான அளவு)

வாழைப்பூவை மெல்லியதாக வெட்டி உப்பில் ஊறவிட வேண்டும். உழுத்தம் பருப்பு, செத்தல் மிளகாய், உப்பு, பெருஞ்சீரகம் எல்லாவற்றையும் சேர்த்து அரைக்க வேண்டும்.

பின்பு வாழைப்பூவை நன்றாகப் பிழிந்து எடுத்து அரைத்த உழுத்தம்பருப்புடன் சேர்த்து நன்றாகப் பிசைந்து வடைபோலத் தட்டி வெயிலில் காயவிடவேண்டும்.

* வேப்பம் பூ வடகம்

இதுவும் வாழைப்பூ வடகம் செய்வதுபோல் செய்யவேண்டும். *

மாவையூர் ஜெயா ஞானசுந்தரம்

இல்லத்தரசிகளும் இடப்பக்கமும்

மானிடரின் உடலில் இதயம் இருப்பது இடப்பக்கம். இதனால்தான். மனிதனின் இதயம்போல் பெண்கள் இருக்க வேண்டும் - இயங்க வேண்டும் என்பதற்காகவே பெண்களுக்கு இடது பக்கம் என்று பெரியவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

உமாதேவியார் மகேஸ்வரனின் இடப்பக்கமாக இருப்பதாக கொள்ளப்படுவதும் இதனால் தான் இதையே இந்து மதமும் வலியுறுத்துகிறது

இல்லத்தரசிகள் கணவனின் இடப்பக்கமே இருக்க வேண்டும்.

இடது தோள், இடது கண் என்பன துடிப்பது பெண்களுக்கு நல்ல சகுனம் என்று கூறப்படுகிறது.

கர்ப்பிணிப் பெண்களின் இடது பக்கம் குழந்தையின் அசைவுகள் தெரிந்தால் அது பெண் குழந்தை என்று பாட்டிமார் கூறுவார்கள்.

பெண்கள் படுக்கும்போது இடப்பக்கமாகச் சரிந்து படுக்க வேண்டும்.

முதல் முதல் புகுந்த வீட்டிற்குள் பிரவேசிக்கும் போது மட்டுமே பெண்கள் வலதுகாலை எடுத்து வைத்துச் செல்ல வேண்டும்.

-கூறியவர்
கிருபானந்தவாரியார்
தொகுப்பு - ரட்ணா

படங்களை இயக்கிக் கொண்டே நடிப்பதில் சாதனைபுரிய ஆவல்

என்கிறார் நேதாஜி

நடிகர்கள் டைரக்டராவதும் டைரக்டர்கள் நடிகர்களாவதும் தமிழ்த் திரையுலகில் சர்வ சாதாரணமாக இப்பொழுது நடைபெற்று வருகிறது.

அந்த வரிசையில் இப்பொழுது பாண்டியராஜனைப் போலவே இயக்குனர் நேதாஜியும் படத்தை இயக்கிக் கொண்டே வேறு படங்களில் நடித்து வருகிறார்.

நேதாஜி ''சொல்வதெல்லாம் உண்மை'' என்ற படத்தை இயக்கிக் கொண்டே ''உன்னிடத்தில் நான்'' என்ற படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

நேதாஜி சொல்கிறார்:

''நான் மட்டும் அல்ல. எந்த இயக்குனருமே வேறு இயக்குனரின் படத்தில் நடிக்கும்போது, தான் ஓர் இயக்குனன் என்பதை மறந்துவிட வேண்டும். ஒரு நடிகனாக மட்டுமே நிற்க வேண்டும்

அப்போது தான், படம் பிரச்சினை இல்லாமல் வளர்ந்து திரைக்கு வர முடியும்.

நான் இயக்குனராக சாதிக்க விரும்புவது வேறு. அதுபோல் நடிகனாகவும் சாதனைபுரிய ஆசைப்படுகிறேன்.

''உன்னிடத்தில் நான்'' படத்தில் நான் அதை சாதித்து இருப்பதாக இயக்குனர் அருண் வீரப்பன் சொன்னார் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது'' என்றார் *

நடிகராக மாறுகிறார்

ரோஜாப்பூ ரவிக்கைக்காரி, ராணுவவீரன், கல்தூண், ராஜாத்தி ரோசாக்கிளி போன்ற படங்களுக்கு கதை - வசனம் எழுதியவரும்—

கண்ணோடு கண், சிம்ம சொப்பனம், திறமை போன்ற படங்களை இயக்கியவருமான விஜய் கிருஷ்ணராஜ் சினிமாத் தனங்களே சிறிதும் இல்லாத ஒரு வித்தியாசமான மனிதர்.

விஜய் சொல்கிறார் :-

''நான் எனது நாடகங்களிலேயே நிறைய நடித்திருக்கிறேன். சினிமாவில் நடிக்காதிருந்த நான், தயாரிப்பாளர் ராம. பாண்டியன் கூறியதற்கு இணங்க முதன் முதலாக 'ராஜாத்தி ரோசாக்கிளி' படத்தில் நடித்தேன்

இப்போது 'தாய்க்கு ஒரு தாலாட்டு' படத்தில் சிவாஜி கணேசனுடன் சேர்ந்து நடித்து வருகிறேன்' என்றார்.

கமல் - வாணி லடாய்

விவாகரத்தில் முடியுமா?

கமலஹாசனின்மனைவி வாணி, விவாகரத்துச் செய்யப் போவதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அது பற்றி கமலஹாசன் இப்படிச் சொல்கிறார்!

''வாணி இப்படிச் சொன்னதாக நானும் பத்திரிகைகளில் தான் பார்த்தேன். அது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. இதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்

''இதுவரை வாணிக்குத் தேவையான அளவு பணத்தைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன்

''விவாகரத்துச் செய்வது பற்றி நான் சிந்திக்கவில்லை. வாணியை ஒரு பிரச்சினையாகவும் கருதவில்லை'' என்றார்.

எந்தப் படத்தில் இவர்கள் அறிமுகம்?

நடிகர்கள் அறிமுகமான படங்களின் விவரத்தை சஞ்சீவி வாசகர் நா. மகேந்திரலிங்கம் தொகுத்து அனுப்பியுள்ளார். அதை நீங்களும் தெரிந்து கொள்ளுங்களேன்!

சிவாஜிகணேசன்	—	பராசக்தி
கமலஹாசன்	—	களத்தூர் கண்ணம்மா (குழந்தைநட்சத்திரம்)
ரஜனிகாந்த்	—	அபூர்வ ராகங்கள்
கார்த்திக்	—	அலைகள் ஓய்வதில்லை
மேஜர்சுந்தரராஜன்	—	பட்டினத்தார்
சரத்பாபு	—	பாலநாகம்மா
மோகன்	—	நெஞ்சத்தைக் கிள்ளாதே
தியாகராஜன்	—	அலைகள் ஓய்வதில்லை
நடராஜ்	—	மூன்று முடிச்சு
விஜயகுமார்	—	பொண்ணுக்கு தங்க மனசு
சந்திரசேகர்	—	நிறம்மாறாத பூக்கள்
பாரதிராஜா	—	கல்லுக்குள் ஈரம்
விஜயசாரதி	—	வீர அபிமன்யு
முத்துராமன்	—	நாலு வேலி நிலம்
எஸ்.எஸ்.ராஜேந்திரன்	—	மணமகள்
விசு	—	படிதாண்டிய பத்தினி
சிவகுமார்	—	காவல் தெய்வம்
விஜயகாந்த்	—	தூரத்து இடிமுழக்கம்
பிரபு	—	சங்கிலி
பாண்டியன்	—	மண்வாசனை
சிலோன்விஜயேந்திரன்	—	பைலட் பிரேம்நாத்
கங்கா	—	உயிர் உள்ள வரை உஷா

விருப்புடன் ஒருவர்

விருப்பத்துக்காக ஒருவர்

சக்கரவர்த்தி அக்பர் தர்பாரில் சிறந்து விளங்கிய மியான் தான்சேன் அக்பருடைய குருவும் நண்பனுமாவார்.

ஒரு நாள் அக்பர் 'நீ இவ்வளவு நன்றாக பாடுகிறாயே. உன்னிலும் பார்க்க நன்றாக பாடக்கூடியவர் எவராகிலும் உண்டா? என்று தான்சேனைக் கேட்டார்

அதற்கு தான்சேன் ஆம். எனது குரு சுவாமி ஹரிதாஸ் என்னிலும் பார்க்க நன்றாகப் பாடுவார் ஆனால் அவர் பாட்டைக்கேட்கவிரும்பினால் அவர் இருக்கும் ஆச்சிரமத்துக்குத்தான் போகவேண்டும். அப்படிப் போனாலும் உங்கள் கட்டளைக்குப் பாடமாட்டார். தான் விரும்பினால்தான் பாடுவார்' என்றார்.

அக்பரோ சுவாமி ஹரிதாஸ் பாடுவதை எப்படியாவது கேட்கவேண்டும் என்று ஒரேபிடியாக இருந்தார்.

தான்சேன் 'அரசே இப்படி அரச உடையில் நீங்கள் வந்தால் காரியம் நடவாது' என்றார்.

பின்னர் அக்பர் ஒரு வேலைக்காரன் போல் உடையணிந்து தான்சேனின் தம்பூராவை தாங்கி தான்சேன் பின் செல்ல, இருவரும் பிருந்தாவனத்தில் சுவாமி ஹரிதாஸின் ஆச்சிரமத்தை அடைந்தனர்.

சுவாமி, தான்சேனை வரவேற்று, உபசரித்தார்.

தான்சேன் தன் குருவை எப்படி பாடச் சொல்லுவது? அவர் ஒரு யுக்தியை கையாண்டார்.

தம்பூராவை மீட்டி தானே பாடத்தொடங்கினார். வேண்டுமென்றே பிழையாகப் பாடினார். இதனை கேட்ட சுவாமி ஹரிதாஸ் அவரை கடிந்துவிட்டு சரியாக பாடும் முறையில் பாடினார்.

பாடத்தொடங்கியவர் நீண்ட நேரம் பாடி அக்பரை மகிழ்வித்தார்.

திரும்பும் வழியில் அக்பர் ''உன் குரு இவ்வளவு அழகாக பாடுகிறாரே நீ ஏன் அப்படி பாடுவதில்லை?' என்று கேட்டார்.

அதற்கு தான்சேன், அரசே தாங்கள் ஆணையிடும்போதெல்லாம் நான் பாடவேண்டும். ஆனால் என் குருவோ தான் விரும்பியபோது உள்ளம் உகந்து பாடுகிறார்' என்றார்.

எஸ் கனகசபை

குரலுக்கு முன்னே தோற்ற வயது

ரசிகர்கள் கிட்டத்தட்ட மறந்தே போய்விட்ட பின்னணிப் பாடகர்களை ஒன்று சேர்த்து மேடையில் அக்காலப் பாடல்களை பாடவைத்த நிகழ்ச்சி சென்னையில் அண்மையில் நடந்தது.

'கல்யாண சமையல் சாதம்' பாடலுக்காக எப்போதோ சிரித்த திருச்சி லோகநாதன் அந்த அதிர் வேட்டுச் சிரிப்பை இன்னமும் அப்படியே தெம்போடு சிரித்துக் காட்டினார்.

ஜமுனாராணி, எம். எஸ். ராஜேஸ்வரி இவர்களின் குரலுக்கு முன்னே அவர்களது வயது தோற்றுப் போயிருந்தது

ஏ. எல். ராகவன், ஜிக்கி, ஏ எம். ராஜா, பி பி. ஸ்ரீநிவாஸ் என இந்தப் பட்டியலே நீண்டது.

-ஜெகன்



சுஹாசினி ரசித்த காதல் கவிதைகள்!

கார்த்திக்கின் பொழுது போக்கு என்ன தெரியுமா? கவிதைகள் எழுதுவது

தமிழில் கவிதைகள் எழுத அவருக்குத் தெரியாதாம் ஆங்கிலத்தில் தான் கவிதைகள் எழுதுகிறார் அதுவும் காதல் கவிதைகளைத்தான் அதிகமாக எழுதியுள்ளார்

'என் கல்லூரி வாழ்வில் நான் சந்தித்த பெண்களில் சிலரை மனதில் நினைத்து உருவான கவிதைகள் இவை.

'சில பொதுவானவை - சில என் மனதில் தோன்றிய காதல் உணர்வு கவிதையாக வடிவெடுத்து விட்டது' என்கிறார் கார்த்திக்.

'எனது கவிதைகளை நான் யாரிடமும் காட்டியதில்லை. நடிகை சுஹாசினிக்கு மட்டும் படித்துக் காட்டினேன். அவர் அதை ரசித்துக் கேட்டார்.

ஆனால் என்ன சொன்னார் என்பதைச் சொல்ல முடியாது அது ரகசியம்' என்றார் கார்த்திக்.

திரை உலகில்

பிரபல கதை வசன கர்த்தா பீட்டர் செல்வகுமாரின் சொந்தப் படத்தை பாலுமகேந்திரா இயக்கவிருக்கிறார். விஜயகாந்தும் ராதாவும் இதில் ஜோடியாக நடிக்கிறார்கள்.

*

'ஒரு மனிதன் ஒரு மனைவி' படத்தை மலையாளத்திலும் கன்னடத்திலும் தயாரிக்கிறார் சுமித்ரா.

*

ரஜனிகாந்திடம் கைவசம் இருக்கும் ஒரே தமிழ்ப்படம் 'மாவீரன்' தான்.

பேபி ஷாலினியின் தந்தை பாபு, ஷாலினியை மையமாக வைத்து ஒரு கதை உருவாக்கி, அதை தானே தயாரிக்க இருக்கிறார்.

*

கறுப்பு — வெள்ளைப் படத்தைக் கலர் படமாக மாற்றக்கூடிய கம்ப்யூட்டர் ஒன்றை வெளிநாட்டில் இருந்து தனக்கென்று தருவித்திருக்கிறார். பிரபல இந்தி நடிகர் ராஜ்கபூர்.

*

தமிழ்த் திரையுலகில் இப்போது மிகவும் பிஸியாக இருக்கிறார் புது மாப்பிள்ளை பாண்டியராஜன். டைரக்ஷன், டிஸ்கஷன், நடிப்பு, இல்லற வாழ்க்கை என்று ஒரே 'டைட்'.

★ தயாரிப்பு: பேரின்பம் ★

உறவுத்திருமணத்தால் உருவாகும் பாரதூரமான பக்க விளைவுகள்

பரவணிப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்ட உறவுகளால் பரம்பரை நோய்கள் தொடர்கின்றன

உறவுத் திருமணங்கள் நமது பாரம்பரியத்தைப் பேணும், நமது பரம்பரையைக் காக்கின்றது என்கின்ற முட்டாள்தனமான எண்ணம் இக்காலகட்டத்திலும் பலரிடையே நிலவுகிறது சொந்த மைத்துனன் மைத்துனி திருமணங்கள் அதாவது ஒருத்தி தன் தாய்மாமன் மகனை மணமுடித்தல் போன்றவை இன்றும் வழக்கில் இருக்கின்றன. இது தப்பிதமான ஒரு செயலாகும் நோய்களையுடைய சந்ததிகள் உருவாவதற்கு இவ் உறவுத் திருமணங்கள் ஒரு காலாக அமைகின்றது பாரம்பரியம் என்பது தத்தமது முதாதையர்களின் வரலாற்றை நினைவு கூருவது என்று தான் பலரும் நினைக்கின்றார்கள் இவ் உறவுத் திருமணங்கள் மூலம் பரம்பரைச் சொத்தைப் பாதுகாக்கலாம் என்று கூறுபவர்கள் இதனால் ஏற்படும் பரம்பரை நோய்களை மறந்துவிடுகிறார்கள். பாரம்பரியம் என்பது முன்னோர்களது பெருமை பேசுவது அல்ல. அதற்கு விஞ்ஞான ரீதியாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஓர் அங்கியின் இயல்புகள் அதன் வழித்தோன்றல்களில் அதாவது சந்ததிகளில் எவ்வாறு ஏற்படுகின்றன என்பதுபற்றிய அறிவுதான் பாரம்பரியம் (Heredity) என படுகிறது. அதாவது பெற்றோரின் இயல்புகள் அவர்களின் சந்ததியில் எப்படி ஏற்படுகிறது என்பது பற்றியதே பாரம்பரியம் ஆகும் இப்பாரம்பரியம் சம்பந்தமான படிப்பு பிறப்புரிமையியல் (Genetics) எனப்படும்.

இவ் உயிர் அங்கிகள் எல்லாம் அடிப்படையாக கலங்களினாலானவை இக்கலங்களே ஓர் உயிரின் மிகவும் சிறிய தொழிற்படும் அலகுகளாகும். இக்கலங்கள் மையத்தில் ஓர் கருவையும் அதனைச் சூழ குழியவுரு என்னும் கூழ்த்தன்மையான பதார்த்தத்தையும் கொண்டவை கரு, குழியவுரு ஆகியன சேர்ந்து முதலுரு எனப்படும் முதலுருவைச் சூழக் கலமென்சவ்வு கலத்தின் எல்லையாகக் காணப்படுகின்றது கரு, குழியவுரு, கலமென்சவ்வு ஆகியன சேர்ந்து கலத்தை ஆக்கும். கருவினுள் நிறமூர்த்தங்கள் எனப்படும் அமைப்புக்கள் காணப்படுகின்றன. இந் நிறமூர்த்தங்களே பெற்றோரின் இயல்புகளை அடுத்தடுத்த சந்ததிக்குக் கடத்துகின்றன. அதாவது பாரம்பரியத்தைக் கடத்துகின்றன. இவ்வாறு கடத்தும்போது சில பாரம்பரிய இயல்புகளில் அடுத்தடுத்த சந்ததிகளுக்கிடையே வேறுபாடுகள் ஏற்படலாம் இவை விகாரம் அல்லது மாறல்கள் (Variation) எனப்படும் இப்பாரம்பரியம் (பெற்றோரின் இயல்புகள் சந்ததிகளில் ஏற்படுதல்) மாறல்கள் (சில இயல்புகளில் சந்ததிகளுக்கிடையே வேறுபாடுகள் ஏற்படுதல்) ஆகியவை பற்றி முதன்முதலில் 1866ஆம் ஆண்டு கிரகர் மென்டல் (Gregor mendel) என்பவர் குறிப்பிட்டார். பட்டாணிக் கடலைத் தாவரத்தில் தனது பரிசோதனைகளைச் செய்த மென்டல் கலங்கள் பற்றிய அறிவு ஏற்படுவதற்கு முன்னரே தனது முடிவுகளை வெளியிட்டார் ஆனால் கலங்களைப்பற்றிய அறிவு வெளிக்கொணரப்பட்டதும் அவரது முடிவுகள் மேலும் உறுதிப்பட்டன

நாம் முன்னர் குறிப்பிட்ட நிறமூர்த்தங்களின் எண்ணிக்கையானது அங்கிகளுக்கேற்ப வித்தியாசப்படுகிறது துரோசோபில்லா எனப்படும் ஒருவகை பழஈயில் நான்கு சோடி நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன மனிதரில் 23 சோடி அதாவது 46 நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஆணிலும், பெண்ணிலும் உள்ள 22 சோடி நிறமூர்த்தங்கள் அமைப்பொத்தவையாகக் காணப்படுகின்றன இந் நிறமூர்த்தங்கள் மனிதனின் உடலமைப்பையும் தொழிற்பாட்டையும் தீர்மானிக்கின்றன. இவை தன்மூர்த்தங்கள் (Auto Somes) என அழைக்கப்படுகின்றன இவற்றை 22AA எனக் குறிக்கலாம் எஞ்சிய ஒரு சோடி நிறமூர்த்தங்களும் பாலைத் தீர்மானிக்கின்றன. இவை இலிங்க நிறமூர்த்தங்கள் (Sex Chromosomes) எனப்படுகின்றன இவை பெண்களில் ஒத்த தன்மையுடையவை அதாவது இரண்டும் X உருவங்களாக உள்ளன எனவே பெண்ணின் நிறமூர்த்த அமைப்பை 22AA+XX எனக் குறிக்கலாம் ஆணில் இவ் இலிங்க நிறமூர்த்தங்கள் அமைப்பொப்பற்றவையாக அதாவது சமச்சீரற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

சி. முரளீதரன்

ஓர் அவலக்குரல்

யாரோ—
எங்கோ ஒரு—
இருட்டறையில்
என்னை—
அடைத்துவிட்டார்கள்!
என்னைத்தேடி
விடுவிக்க—
பலர்
புறப்பட்டார்கள்!
அவர்களில்—
வழி தவறிப்
போனவர்கள்—
அநேகர்!
இன்னும்
இதய சுத்தியுடன்
உறுதியாக
எனை நாடிப்
பல தடைகளையுந்
தாண்டி—
எனை மீட்க
வந்துகொண்டிருப்ப
வர்கள்—
ஒரு சிலர்!
அவர்கள் என்னை
நிச்சயம் விடுவிப்பர்
- அந்த
நம்பிக்கையிலேயே
இன்னமும்
நான் — உயிரோடு
இருக்கிறேன்!
அதுசரி—
நான் யார் என்று
கேட்கிறீர்கள்?
இன்றைய
பல நடப்புகளில்
நான் இல்லையோஎன்று
நீங்கள் உணர்ந்தே
இருக்கிறீர்கள்.
நான்தான்—
நீதி!

ப. மகேந்திரதாசன்
நாயன்மார்க்கட்டு

புத்தரின் பல் பற்றி கல்கி எழுதிய கட்டுரை

இலங்கைக்கு விஜயம் செய்த கல்கி அவர்கள் 1939 ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் தனது சுற்றுப்பயணம் பற்றி எழுதிய கட்டுரையிலிருந்து இது எடுக்கப்பட்டது.

உலகத்தில் வேறு எந்த ஊருக்குமில்லாத ஒரு தனி விசேஷம் கண்டிக்கு உண்டு. அதனால் தான் உலகமெங்குமுள்ள பௌத்த மதத்தினருக்கு அது விசேஷ புண்ணிய ஸ்தலமாக இருக்கிறது

இந்துக்களுக்குக் காசி எப்படியோ - முஸ்லிம்களுக்கு மக்கா எப்படியோ-அப்படி பௌத்தர்களுக்குக் கண்டி என்று சொல்லலாம்.

இவ்வளவு பெருமை அதற்கு வந்தது ஏன்?

மகான் கௌதம புத்தரின் பிரசித்தி பெற்ற பல்லானது கோயில் கொண்டு எழுந்தருளியிருக்குமிடம் இந்தக் கண்டியே அல்லவா?

என்ன? புத்தரின் பல்லா? நிஜமாகவா? என்று நீங்கள் கேட்கலாம்

இந்த மாதிரிக் கேள்வியை இலங்கை யாத்திரை பற்றிய புத்தகங்கள் எழுதியிருக்கும் வெள்ளைக்காரர்கள் கூடக் கேட்கிறார்கள்.

புத்தரின் நிஜப் பல் தானா இது என்று அந்தத் துராத்மாக்கள் சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கிறார்கள்

எனக்கு என்னமோ அதைப் பற்றிக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. ஏனென்று கேட்டால் நல்லது, புத்தர் இவ்வுலகில் பூத உடலுடன் வாழ்ந்தது எந்தக் காலத்தில்? இன்றைக்கு இரண்டாயிரத்து அறுநூறு வருடங்களுக்கு முன்னல்லவா? அந்தக் காலத்தில் பொய்ப்பல் வைத்துக் கட்டிக் கொள்வதுண்டு என்பதாக நாம் கேள்விப்பட்டிருக்கிறோமா? இல்லையே. பல் வைத்தியர்கள் இருந்தார்கள் என்பதற்குச் சரித்திரத்தில் அத்தாட்சி இருக்கிறதா? அதுவும் இல்லையே!

பின்னர், அது புத்தருடைய நிஜப் பல்லாயிராமல் பொய்ப்பல்லாக எப்படி இருக்க முடியும்?

இந்தச் சின்ன விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடியாத அந்த வெள்ளைக்காரர்கள் இன்னுமோர் அறிவீனமான கேள்வியும் போடுகிறார்கள். இந்தப் பல் இரண்டு அங்குல நீளமல்லவா இருக்கிறது? எங்கேயாவது ஒரு மனுஷருடைய பல் இரண்டு அங்குல நீளம் இருக்குமா? இருக்க முடியுமா? என்று கேட்கிறார்கள்.

இவர்கள் இலங்கையில் தங்களுடைய கண்களை மட்டும் சரியாக உபயோகப்படுத்தியிருந்தால் இப்படிக் கேட்க மாட்டார்கள்.

இலங்கையிலுள்ள புத்தர் சிலைகளை [illegible] அடி 60 அடி உயரமுள்ள சிலைகளை - இவர்கள் பார்க்கவில்லையா? அறுபது அடி உயரமுள்ள புத்தருக்கு இரண்டு அங்குல நீளமுள்ள பல் இருப்பது ஒரு பெரிய காரியமா?

மேலும், இந்தப் பல்லுக்காக எத்தனை பெரிய ராஜாக்கள் எத்தனை, பெரிய யுத்தங்கள் நடத்தியிருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

எத்தனை முறை இந்தப் பல்லை எதிரிகள் கொண்டு போனார்கள்? எத்தனை தடவை திருப்பிக் கைப்பற்றிக் கொண்டு வரப்பட்டது? ஒருமுறை இது இந்தியாவுக்கே கொண்டு போகப்படவில்லையா? மறுபடி இது வரவழைக்கப்படவில்லையா? போர்த்துக்கீசியர்கள் இதைக் கைப்பற்றிக் கொண்டு போக முயன்றதும் பொய்யா?

ஒரு தடவை இந்தப் பல்லைப்போல் போலிப் பல் ஒன்று செய்து வைத்து ஓர் அரசனை இன்னொரு அரசன் ஏமாற்ற முனைந்த விவரம்

(6ஆம் பக்கம் பார்க்க)

பண்டிதமணி: வரலாறும் காலமும்

புராண படனத்தில் நீ நாளை பயன் சொல் அது உனது பாரம்பரியமான குலவித்தை

(சென்றவாரத் தொடர்)

மட்டுவிற் காவிய பாடசாலையிற் படித்து வந்த இளைஞர் பலர் நாளடைவில் நல்ல தமிழ் வல்லவராய், நாவலர் பாரம்பரியத்தை நன்கறிந்தவர்களாய், இளமையிலேயே ஆசிரியசாலைகளில் இலகுவில் புகுந்து கற்று வல்ல ஆசிரியர்களாய்ப் பிற்காலத்தில் பெரும் பெயரெடுத்தவர்கள் அவர்களுள் கோபாலபிள்ளை, இளையதம்பி, நடராசா, கந்தசாமி, ஆறுமுகம் முதலானோர் ஒரு சிலர்.

காவிய பாடசாலையிற் படித்து வந்த இளைஞர்களுக்குப் பரிசளிப்புவிழாவொன்றைப் பாரிய அளவில் செய்து பலரும் அறியப் பண்ண வேண்டும் எனச் செயல் வீரன் செல்லப்பர் தீர்மானித்தார் சேர் இராமநாதன் அவர்களை விழாவுக்கு அழைப்பதற்கு அவர்கள் எடுத்த முயற்சி வெற்றிகரமாக வாய்த்தது. இராமநாதன் அவர்களுக்குத் தென்மராட்சியில் பெருவிழாவாம் வரவேற்பாம் என்று கேள்விப்பட்டதும் சைவப் பெரியார் புலோலியூர்ச் சிவபாதசுந்தரம் அவர்கள் ஒழுங்குகளை மேற்பார்வையிடுவதற்காக நான்கு நாள்களுக்கு முன்னரே அங்கே சென்றிருந்தார்.

வீதிகள் ஒழுங்கைகள் எங்கும் விதானங்கள், பந்தர்கள் வளைவுகள் அமைத்து, வெள்ளை கட்டித் தூய்மை செய்து மகர தோரணம், வாழை முதலியன கட்டி மட்டுவிலெங்கும் விழாக் கோலம் பூண்டிருந்தது வீடுகள் தோறும் மங்கலகரமான வரவேற்புக்கான நிறைகுடம், குத்துவிளக்கு, மாலை மரியாதைகள் வரிசையாயிருந்தன. எல்லோருடைய மரியாதையையும் ஏற்று மலர்ந்து சென்ற இராமநாதன் தம்பதிகள் மேடையிலமர்ந்ததும் வரவேற்புரை வழங்குவதற்கு மகாலிங்கசிவம் முன்வந்தார். வெள்ளிப் பனிமலை மீது பார்வதி சமேதராய் எழுந்தருளிய பரமேஸ்வரனைப் போல இங்கெழுந்தருளிய பெருமை மிக்க சேர் இராமநாதன் அவர்களுக்கும் தேவி லீலாவதி அம்மையாருக்கும் என்று பெரிய ஆலாபனஞ் செய்து வரவேற்ற மகாலிங்கசிவம் அவர்களின் உரை சேர் இராமநாதன் அவர்களை வெகுவாக உருக்கிவிட்டது வெள்ளிப்பனிமலை உருகினாற் போல உருகிய அவர் மகாலிங்கசிவம் அவர்களுக்கு மதிப்புக்குரிய வேலை கொடுக்கவும் வழி செய்து விட்டார் காவிய பாடசாலையில் பயின்ற மாணாக்கன் ஒருவன் தன் மழலைக் குரலில் படித்தளித்த பாடல் ஒன்று எல்லோரையும் பிரமிக்கச் செய்தது

அந்தப் பாடலில் முன்னர் திருமால் இராமாவதாரம் எடுத்தமையும், பின்னர் கிருஷ்ணவதாரம் எடுத்துக் கீதை வகித்தமையும் பேசப்பெற்றது. பின்னர் சேர் இராமநாதன் அவர்கள் தோன்றி உலகத்தார் அறியும் வகையில் அந்த பகவத் கீதைக்குச் சிவாத்துவிதமாக ஆங்கிலத்தில் விளக்கம் எழுதியமையும் கூறப்பெற்றது திருமாலுக்கும் இராமநாதனுக்கும் தொடர்பு விளக்கப் பெற்றது

“செந்திரு மாலேமுன்
செயராமச் சந்திரனாய்
வந்தாய்ப் பின்கீதை
வகுக்கவோ - இந்தநாள்
சேர்இராம நாத
செயசிங்க மாயினாய்
ஆரறிவாருன்வற் புதம்''

இந்தப் பாட்டை மாணாக்கன் இசையோடு பாடிக் கொடுப்ப, இராமநாதன் அவர்கள் இரண்டு கைகளாலும் அந்த இளைஞனைத் தழுவிப் பத்திரத்தை ஏற்று வைத்த பின், இந்தப் பாடலைப் பாடிய சி. க. என்பவர் யாவர் என்று கேட்டார். செல்லப்பா அவர்கள் மகிழ்ச்சி பொங்கப் பண்டிதமணி அவர்களைத் தழுவியவாறே. 'இவர்தான் பண்டிதர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, இவர் நாவலர் காவிய பாடசாலையில் உருவானவர்' என்றெல்லாம் அறிமுகஞ் செய்து 'இவரே இங்கே நடைபெறுகின்ற காவிய பாடசாலையை நடத்திப் பிள்ளைகளை உருவாக்கி வருகின்றார்' என்று எடுத்துக் கூறியதும், இராமநாதன் அவர்கள் 'இப்போது இவர் வேறென்ன செய்கிறார்' என்று கேட்ப 'இவர் ஆசிரியராகப் பயிற்சி பெறுவதற்கு ஆயத்தமுஞ் செய்து வருகின்றார்' என்று கூறினர்.

அதன் பின் இராமநாதன் அவர்கள் காவிய பாடசாலையில் திறமை காட்டிய மாணாக்கர்களுக்குப் பரிசுகள் வழங்கிய பின், உரை நிகழ்த்தி ஊரவர்களுக்கு நன்றி கூறி விடை பெற்றுச் சென்றார் பண்டிதமணி அவர்கள் பாடிக் கொடுத்த இந்த வெண்பா இராமநாதன் அவர்களின் படிப்பறையில் 1930 ஆம் ஆண்டளவில் சுவரில் தொங்கியது. பின்னர் இது பரமேஸ்வராக் கல்லூரி நூலகத்தில் மாட்டப்பட்டிருந்தது

பண்டிதமணி அவர்கள் மீது அபிமானங் கொண்டிருந்தவர்களுள் கச்சாய்ச் சின்னையா என்பவரும் ஒருவர். அவர் பெரிய தென்னந்தோப்புக்கு உரியவராய் கிடுகு பின்னும் நிபுணராயிருந்தவர். கிடுகு பின்னிக் கொண்டிருக்கும் போதே அவருக்குப் பாட்டுப்பாட வரும். அவர் குபீரென வரும் பாட்டை மனதில் எழுதிவைப்பதும், எழுந்தோடிச் சென்று காகிதத்தில் எழுதிக் கொள்வதும் வழக்கம் அவருக்கு யாப்பருங்கலம், தண்டியலங்காரம் எவையும் தெரியாது அவர் பலவகைப் பாவினங்களையும் தங்குதடையின்றிப் பாட வல்லவர்.

அவர் ஒரு சமயம் பாடிய கட்டளைக் கலித்துறை ஒன்றைப் படித்துப் பார்த்து எழுத்துக்களை எண்ணினார். அவரைக் கவனித்த சின்னையா அவர்கள் "அது என்ன எண்ணுகிறீர்?" என்று கேட்டார் "கட்டளைக் கலித்துறை என்றால் அடிகள் தோறும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

● க. சி. குலரத்தினம் ●

அகதி முகாமில் இருந்த வேளை 17,000 ரூபா சேர்த்துத் தந்த துறைமுக தொழிலாளரின் அன்பு

முன்னாள் பத்திரிகையாளருக்கு பின்னர் ஏற்பட்ட அனுபவம்

துடிப்புடனும் துணிச்சலுடனும் செயலாற்றும் பத்திரிகையாளனுக்கு ஏற்படும் அனுபவங்கள் விசித்திரமானவை.

செய்தியாளராகத் தொழிலை ஆரம்பித்து அரசசேவையில் நீண்டகாலம் பணியாற்றி ஓய்வெடுத்துள்ள அறுபத்தாறு வயதுள்ள திரு. டி. டி. கணநாதன் இன்று மானிப்பாயிலுள்ள அவரது வீட்டில் அமைதியாக வாழ்கிறார்.

திரு. கணநாதன் தமது நினைவு அலைகளை சஞ்சிவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது தமது பத்திரிகைத்துறை அனுபவங்களுடன் ஆரம்பித்தார்.

திரு. கணநாதன் தமது நினைவலைகளை மீட்டபோது சொன்னதாவது:-



நான் டைம்ஸ் பத்திரிகையில் (Times of Ceylon) செய்தியாளனாகக் கொழும்பில் வாழ்க்கையை ஆரம்பித்த போது ஏ. சி ஸ்டுவேர்ட் என்ற ஆங்கிலேயர் அதன் பிரதம ஆசிரியராக இருந்தார்.

காலஞ் சென்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சம பிரதிநிதித்துவக் கோரிக்கையை எமது பிரதம ஆசிரியர் முழுமையாக ஆதரித்த போதிலும், அதற்கு மாறான கருத்துக்களுக்கும் தமது பத்திரிகையில் உரிய வழங்கினர். "உண்மை புனிதமானது. கருத்து சுதந்திரமானது'' என்று எமக்கு வலியுறுத்துவார். ஆனால் இன்று தலைநகரில் இருந்து வெளியாகும் ஆங்கில, சிங்கள தினசரிகளிடம் இந்தத் தெளிவைக் காண முடிவதில்லை. உண்மைக்குப் புறம்பான செய்திகளைத் தாங்கி வெளிவருவது எம் போன்ற பத்திரிகையாளர்களுக்கு வேதனையைத் தருகிறது.

அகதிகளைப் பற்றிய செய்திகளை வெளியிடும் போது கூட பாரபட்சம் காட்டுகிறார்களே!

செய்தியால் வந்த தொல்லை

நான் ஆரம்பத்தில் திரு.W L.பெர்னாண்டோவின் கீழ் செய்தியாளனாக வேலை செய்த போது நாடாளுமன்ற செய்திகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டிருந்தேன்

தற்போதைய ஜனாதிபதி ஜே ஆர். அப்போது நிதியமைச்சராக இருந்து சமர்ப்பிக்கவிருந்த பட்ஜட் சிபார்சுகள் சில எமது பத்திரிகையில் வெளியாகின இதனால் அரசாங்கம் பதற்றமடைந்தது. டாக்டர். என் எம் பெரேரா இவை எவ்வாறு வெளியாகின என்று நாடாளுமன்றத்தில் சர்ச்சை கிளப்பினார்.

இதனை விசாரிக்க நாடாளுமன்றம் ஒரு குழுவினை நியம[illegible] அல்பேர்ட் பீரிஸ், மார்ட்டினிஸ், எஸ் ஜே வி செல்வநாயகம் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தார்கள்.

இக்குழு முன் [illegible] நான் ஆஜராக்கப்பட்டேன் கடைசியில் இக்குழு உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டது

பின்னர் நான் உணவுத் திணைக்களத்தில் வேலை செய்த காலத்தில் காலியில் கடமை ஆற்றினேன் ஒரு நாள் காலை [illegible]

டி டி கணநாதன்

இனக்கலவரத்தை இரை மீட்போம்

- கந்தககவி -

மனக்கலவரங்களை
மாறி மாறித்தந்த
இனக்கலவரங்கள்
எத்தனை எத்தனை.....
ஆடிக்கலவரத்தால்
ஆடிப் போனோர் —
அகதிகளாய்
ஓடிப் போனோர்
எத்தனை எத்தனை.....
தமிழன் என்பதால்
தலைநகரில்
தலையிழந்தோர்
எத்தனை எத்தனை....
விசாலமான வீடுகள்
விலாசமின்றிப் போக
கரியான கடைகள்
எத்தனை... எத்தனை.....
சிங்களக் குண்டர்களால்
சிறை முகாமிலேயே
சிதை மூட்டப்பட்ட
சிங்கங்கள்
எத்தனை எத்தனை.....
புத்தம் வளர்ந்த புண்ணிய பூமி.
ரத்தம் கேட்டதால்
முண்டமாக நிலத்தை
முத்தமிட்ட முகங்கள்
எத்தனை எத்தனை.....

காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

தேவப் பிரியன் அசோகன்

பகுதி 2

நேருவிடமிருந்து இந்திராவுக்கு

சந்திரகுப்தன் அரசவையிலே வந்திருந்த கிரேக்க தூதராகிய மெகஸ்தனிஸ் என்பவர் இந்தியர்கள் அழகையும், அலங்கார ஆடை அணிகலன்களையும் விரும்பிப் போற்றி வந்தார்கள் என்றும்-

அவர்கள் உயரத்தை அதிகப்படுத்திக் காட்டுவதற்காக ஒருவிதப் பாதரட்சையை அணிந்து வந்தார்கள் எனறும் கூறுகிறார்.

இதைக் கேட்க நீ ஆச்சரியப்படுவாய்.

ஆகவே உயர்ந்த குதிக்கால்கள் கொண்ட பாதரட்சைகள் தற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டவை என்று சொல்வதற்கில்லை.

பிந்துசாரனுக்குப் பின் கி. மு. 268 ஆம் ஆண்டில் அசோகன் சிம்மாசனம் ஏறினான். வட இந்தியா முழுவதையும் மத்திய இந்தியாவையும் தன்னுள் கொண்டு, மத்திய ஆசியா வரையில் பரவியிருந்த பெரிய சாம்ராஜ்யத்துக்கு அவன் தலைவன் ஆனான்.

தெற்கிலும் தென் கிழக்கிலும் தன் சாம்ராஜ்யத்துக்குள் அடங்காமலிருந்த வேறு பல நாடுகளையும் வென்று சேர்க்கக் கருதிய அவன் தான் பட்டத்திற்கு வந்த ஒன்பதாவது ஆண்டில் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்றான்

மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளுக்கிடையே இந்தியாவின் கீழ்க்கரையில் இருப்பது கலிங்க தேசம்.

கலிங்கர்கள் வீரத்துடன் போரிட்டார்கள்; ஆனால் அவர்களில் ஏராளமானவர்கள் போர்க்களத்திலே மடிந்து போனதினால் தோற்றுவிட்டார்கள்.

இந்தப் போரும் அத

(6ஆம் பக்கம் பார்க்க)

தெற்கே இருந்து வரும் மின்சாரத்தில் தங்கியிராது மாற்று சக்தி வளங்களை கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியத்தை உதயன் சமீபத்தில் வலியுறுத்தி இருந்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும் இத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் இவ்வாறான கட்டுரைகள் தொடர்ந்து எழுதுவார்களாயின் அது எம்மக்களுக்கு எதிர் காலத்தில் நல்ல பயனை அளிக்க உதவலாம்

கடற்பெருக்க சக்தி மின்சாரம்

யாழ் குடா நாட்டுக்கு சாத்தியம்

யாழ்ப்பாணக் கடலேரியையும் வங்காளக் கடலையும் முறையாகத் தொடுப்பதன் மூலம் இதை உருவாக்கலாம்

கடந்த தசாப்தத்தில் எண்ணை விலையேற்றத்தின் காரணமாக மற்றைய நாடுகள் இத்துறையில் மிகவும் ஆர்வத்துடன் முன்னேறின. ஆனால் நாம் சிறிதளவும் முன்னேறவில்லை. துர் அதிஷ்ட வசமாக எமது பகுதியில் நீர் மின்சாரம் கூட இல்லை. இவ்வாறான நிலையில் நாம் இத்துறையில் அக்கறை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்தியா இத்துறையில் மிகவும் முன்னேறியுள்ளது. வீட்டுக்கு வீடு சூரியஅடுப்பு, எரிவாயுவின் பிரயோகம் முதலியவற்றை அறிமுகப்படுத்தி வருகிறது. அந்த நாடு வீட்டுக்கு வீடு மாடு வளர்க்கும் பழக்க முள்ளநாமும், குறைந்தது உயிர்வாயுவைப் பாவிப் பதிலாவது எவ்வித தடங்கலும் இருக்காது.

எமது பிரதேசத்தில் என்னென்ன சக்திவளங்கள் உண்டு என்பது பரந்த அளவில் ஆராயப்பட வேண்டிய அவசியமுள்ளதாகும். இவ்வாறாக யாழ்குடாநாட்டில் கிடைக்கக் கூடிய சக்தி வளங்களில் ஒன்று தான் கடற்பெருக்க சக்தி (Tidal Energy). தீவுப்பகுதிகளுக்கு பண்ணைப் பாலத்தைக்கடந்து சென்றவர்கள் பாலத்தின் கீழே குழாய்களினூடாக கடல் நீர் பாய்வதை அவதானித்திருப்பீர்கள். இங்கு 6 மணிக்கு ஒரு தடவை கடல் ஒரு பக்கத்தால் பெருகும்போது மறுபக்கத்தால் வற்றுகிறது. இவ்வாறு நடைபெறும்போது நீரானது பெரும் பக்கத்திலிருந்து வற்றும் பக்கத்திற்கு ஓடுகிறது. இவ்வாறாக 6 மணிக்கு ஒரு தடவை மாறி மாறி ஓடுகிறது.

உதாரணமாக பண்ணைப் பாலத்தை எடுத்தோமாகில் அங்கு நீர் ஓடுவதற்காக பல குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். குழாய்களின் எண்ணிக்கையைக் குறைப்போமாகில் நீரின் அளவும் வேகமும் அதிகரிக்கும். அத்துடன் பாலம் போடப்பட்ட போது அடியில் சீமெந்து போடப்படாமையால் கற்களின் ஊடாகவும் நீர் ஊடுருவிப் பாய்கிறது அவ்வாறு செல்லும் நீரையும் தடை பண்ணுவோமாகில் நீரின் வேகம் மேலும் அதிகரிக்கும்.

சாதாரணமாக நீர்த் தேக்க அணைக்கட்டிலிருந்து பெறப்படுகின்ற நீர் மின்சார நிலையத்தைப் போலல்லாது கடற்பெருக்க சக்தியில் இருந்து பெறப்படுகிறற் மின்சார நிலையத்தின் கான ஆரம்பச்செலவு இரட்டிப்பானது சாதாரணமாக நன்னீர் நீர்த் தேக்க அணைக்கட்டிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் போது நீர்த் தேக்கத்திற்கு உள்ளே வருகின்ற நீரினளவும் வெளியே செல்கின்ற நீரின் அளவும் ஏறத்தாழ ஒரே அளவாக இருப்பதாலும், நீர்த்தேக்கமானது பெருமளவு நீரைக் கொண்டிருப்பதனாலும், நீரானது மின்சாரம் உற்பத்தி செய்யும் சுழலி (Turbine) ஊடாகப் பாயும்போது நீர் மட்டத்தில் அவதானிக்கக்கூடிய அளவு மாற்றம் ஏற்படுவதில்லை. இதனால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அழுத்த வேறுபாட்டை (Voltage) சீராக வைத்துக் கொள்வது மிகவும் இலகுவானது ஆனால் கடற்பெருக்கத்தின் போது குழாயினூடாகப் பாயும்நீரின் வேகமானது நேரத்திற்கு நேரம் மாறுபடுவதால் அழுத்த வேறுபாட்டைச் சீராக வைத்துக் கொள்வதற்காக வேறு அமைப்புகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதனாலேயே ஆரம்பச் செலவினம் அதிகரிக்கிறது இத்துறையில் சீனா மிகவும் முன்னேறியுள்ளது. அந்த நாட்டின் இத்துறை சார்ந்த தொழில் நுட்ப அறிவை பயன்படுத்துவதன் மூலம் முன்னேற்றம் காண முடியும்.

மகாதேவா தாம்போதி அமைக்கப் பெற்றதும் குடா நாட்டின் மிகப் பெரிய கடலேரியான யாழ்ப்பாணக் கடலேரியின் சக்திவளம் அறியப்படலாம். மேலும் எங்கெங்கு கடல் பெருக்க சக்தி உண்டென்பதை ஆய்வு நடத்துவது அவசியம். உதாரணமாக எழுவைதீவிற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய கடல் பகுதியில் வலுமிக்க நீரோட்டம் உண்டு என்று சொல்லப்படுகிறது. இவை எல்லாவற்றையும் ஆய்வின் பின்னரே உறுதி செய்ய முடியும்.

நாம் அதிஷ்டசாலிகளாக இருந்தால் வங்காள விரிகுடாக் கடலையும் யாழ்ப்பாண ஏரியையும் பாரிய குழாய் மூலம் அல்லது கால்வாய் மூலம் இணைக்கும்போது பெரும் சக்திவளம் எமக்குக் கிட்டலாம். இவ்வாறான திட்டமொன்றை இஸ்ரவேல் செயற்படுத்துவதற்கு இருந்தது. இறந்த கடல் (Dead sea) என்று சொல்லப்படுகின்ற கடல் ஏரியையும் மத்திய தரைக்கடலையும் குழாய்மூலமாக இணைப்பதன் மூலம் பெருமளவு மின்சாரத்தை ஏரி நிறையும் வரை (ஏறத்தாழ 100 வருடங்கள) உற்பத்தி செய்வதற்கு திட்டமிட்டு இருந்தது. பின்னர் சில அரசியல் காரணங்களுக்காகவும் Solar Pond System எனப்படும் செலவு குறைந்த மாற்று வழி கண்டு பிடிக்கப்பட்டதாலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

இஸ்ரவேலின் இறந்த கடலைப் போலல்லாது எமது ஏரியில் நீர் நிறைந்து உள்ளது. ஆகவே வங்காள விரிகுடா கடலுடன் இவ் ஏரியை இணைக்கும்போது அது அனேகமாக இருபக்க ஓட்டமாகவே அமையும் ஆனால் இவ்வோட்டமானது சில கிழமைகளுக்கு ஒரு தடவை அல்லது சில தினங்களுக்கு ஒரு தடவை மாறிப் பாயும் ஓட்டமாகில் நாம் அதிஷ்டசாலிகள் ஆவோம் தீர்க்கமான ஆய்வின் பின்னரே இது எவ்வாறு சாத்தியமாகும் என்பதைக் கூற முடியும். *

நடராஜா ஜெயகுமார்

கீரையின் மகிமை

அகத்திக்கீரை, முருங்கைக்கீரை, பசளிக்கீரை, அரைக்கீரை எனப்பல வகைக் கீரைகள் இங்கு பயிராகின்றன 200க்கு அதிகமான கீரைகள் இந்தியாவில் பயிர் செய்யபபடுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது ஒருவனது ஒரு நாளைய சமச்சீர் உணவுத் திட்டத்தில் 116 கிராம் கீரை வகை உணவு இருக்க வேண்டும். இவ்வகை உணவு மனிதனுக்குத் தேவையான தாதுப்பொருளையும், ஏ, சி, வைட்டமின்களையும் பெருமளவில் பெற்றிருக்கின்றன.

ஜாவா, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் மாந்தளிர் கூட உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. வேறுசில நாடுகளில் மூங்கிலின்பசுந்தளிர் உணவாகப்பயன்படுகிறது. கீரைகளை பயிரிடுவதிலும் தொல்லையில்லை அதன் விளைச்சலும் பெருவாரியாக இருக்கும்

ஆதாரம்: கிராமராஜ்யம்

★ விளைச்சலை நாசமாக்கும்

எலிகளை கட்டுப்படுத்த சில வழிமுறைகள் இதோ

வயலில் விளைவிக்கப்படும் தானியத்தில் பெரும் பகுதியை எலிகள் சேதப்படுத்தி விடுகின்றன அவை பயிர்களையும் அழித்து நாசப்படுத்துகின்றன.

எலிகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விளைபொருள்களைப் பாதுகாக்கலாம்.

எலிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது குறித்து இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது

எலிகள், உற்பத்தியாகும் உணவுப்பண்டங்களில் ஐந்து விதத்தைச் சேதமாக்குகின்றன

ஓர் எலி ஒருவருடத்தில் 7 கிலோ தானியத்தை உணவாக உட்கொள்கிறது. அத்துடன் ஒரு வளைக்குள் இரண்டு கிலோ தானியத்தைச் சேர்த்துக்கொள்கிறது. பயிர்களையும் அது அழித்து நாசமாக்குகிறது.

காடு, செடி, வரம்புகள், தென்னை வட்டுக்கள், வீட்டுக்கூரை. இடுக்குகள் ஆகியவற்றில் கூடுகட்டி வசிக்கும் எலி தன்னைப் பாதுகாப்பதற்காக வசதியாக வளைகளை அமைத்துக் கொள்ளும்.

வளை அமைப்பு

பத்து அடி தொடக்கம் பதினைந்து அடி நீளமான வளைகளை எலி வெட்டும். இதில், படுக்கையறை, குறுக்குவழி, சேமிப்பு அறை நுழைவாயில், அவசரமாக வெளியே வந்து தப்பிச்செல்ல 4 அல்லது 5 உதிரிப் பாதைகள் ஆகியவற்றை அமைக்கும்

இது தவிர தோட்டங்களில், தென்னை, பனை, போன்ற மரங்களின் மட்டை இடுக்குகளிலும்- வீடுகளில் பெட்டிகள், கூரை, செத்தை இடுக்குகள், மேசை இலாச்சி இடுக்குகளிலும் கூடுகட்டி வசிக்கும்.

வயல்களில் உணவு இல்லாவிட்டால், சூடுகள், வைக்கோல்களைச் சேதப்படுத்தும் தானியங்கள் இல்லாவிட்டால், நத்தைகள், சிறு பூச்சி,

கு. கனகசபாபதி

(7 ஆம் பக்கம் பார்க்க)

பஞ்சாமிர்தம்

பலரச அமிர்தம்

பசிக்கும் நிறத்திற்கும் நிரம்பத் தொடர்பு

சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள் நிறங்களிலான பிளேட்டுக்களில் சாப்பிட்டால் பசி அதிகரிக்கும்; நரம்புகளை உற்சாகத்துடன் செயற்பட வைக்கும். அதன் மூலம் உடலில் சதைபோடும்.

மெல்லிய நீலம், பச்சை நிறபிளேட்டுக்களில் சாப்பிட்டால் பசி குறையும்.

வெளிர் பச்சை, கடும் நரை, வெள்ளை நிறத்தட்டுக்களில் சாப்பிட்டால் துப்புரவாக பசியே எடுக்காது.

அமெரிக்க ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள வைத்தியக் கல்லூரி நடத்திய ஆராய்ச்சியில் மேற்கண்ட கண்டுபிடிப்புக்கள் வெளியாகின

ஆதாரம்: மாஸ்கோநியூஸ்

மரகத லிங்கம்

வேதாரண்யத்தில் உள்ள வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் மரகதத்தில் செய்யப்பட்ட லிங்கம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இந்த மரகத லிங்கம் வைக்கப்பட்டுள்ள அறைக்கு பொதுமக்கள் செல்லமுடியாது தடுக்கப்பட்டுள்ளது.

இரவுபகலாக பொலீஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

எக்ஸ்ரே வாசிக்க கம்பியூட்டர்

எக்ஸ்ரே படத்தைத் தானேவாசித்து நோயைக் கண்டுபிடிக்க கம்பியூட்டர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

சாதாரணமாக எக்ஸ்ரே படங்களை ரேடியோகிராபர் தான் 'வாசிப்பர்'. முழுக்கச் சரியாக அவரால் அப்படங்களை 'வாசிக்க' முடியாது. படங்களைச் சரியான முறையில் 'வாசித்துக்' கண்டுபிடிக்க 2, 3 டாக்டர்களும் தேவை.

ஆனால் இப்போது எக்ஸ்ரே படங்களை வாசிக்க என்றே கம்பியூட்டர் வந்து விட்டது.

லெனின் கிருட் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ள இந்த கம்பியூட்டர் சரியான நோயைக் கண்டு பிடித்து கூறிவிடுகிறது.

விமானத்தில் தொலைபேசி

ஜப்பானில் உள்நாட்டு விமானத்தில் தொலைபேசி வைக்கப் போகிறார்கள்.

விமானத்தில் இருக்கும் தொலைபேசி மூலமாக ஜப்பானில் எங்கு வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

எந்த இடத்திலிருந்தும் விமானப் பயணியோடு பேசலாம்.

உலகிலேயே விமானத்தில் முதன் முதலாக டெலிபோன் வைக்கும் நாடு என்ற பெருமையை ஜப்பான் நாடு இதன் மூலம் தனதாக்கிக் கொள்கின்றது

சஹாராவை கடந்து சாதனை

முதன்முதலாக சைக்கிளில் சஹாரா பாலைவனத்தைக் கடந்து சாதனை நிகழ்த்தினார், சுவிட்சர்லாந்து வாசி ஒருவர்.

தினமும் 250 கிலோ மீற்றர் சைக்கிளில் ஓடினார். இப்படி மூன்று வாரங்கள் சைக்கிளில் ஓடி சஹாராவைக் கடந்த சுவிஸ் வாசியின் பெயர் பிலிப்போர்னியர்.

ரோம் நகர நீரோ மன்னன்

ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்த நீரோ மன்னன் செய்த இன்னொரு வீரச் செயல் தெரியுமா?

கி. மு. 60 இல் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் சில குறிப்பிட்ட போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்டான் நீரோ. அவனுக்கும் விளையாட்டுக்கும் எட்டாம் பொருத்தம். எனினும் தனக்கிருந்த அரசியல் செல்வாக்கினால் பங்கு பற்றிய சகல போட்டிகளிலும் தானே வெற்றி பெற்றதாக அறிவிக்கச் செய்தானாம்.

அபிமான நாய் மாட்டி வைத்தது

போபாலைச் சேர்ந்த டாக்டர் மல்கோத்திராவுக்கு அவரது நாய் மீது அளவு கடந்த பிரியம்.

அதைக் கண்ட அண்டை வீட்டுக்காரரான தீரஸ்தாஸ் என்பவருக்கு எரிச்சல் ஏற்பட்டது. அவர் ஒருநாள் நாய்க்கு விஷம் வைத்துக் கொன்று விட்டார்.

இதையறிந்த மல்கோத்திரா கொதித்தெழுந்து ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு தீரஸ்தாஸிடம் சென்று மிரட்டினார்.

இறந்துபோன நாயை அவர் தலைமேலே சுமந்து வரச் செய்து நாய்க்கு இறுதி ஊர்வலம் நடத்தினார்.

நாய்க்குச் சவக்குழி கூட தீரஸ்தாஸ் மூலம் வெட்டுவிக்கப்பட்டு நாய் புதைக்கப்பட்டது.

டாக்டர் தன்னை அவமானப்படுத்தி ஏளனம் செய்ததாகத் தீரஸ்தாஸ் பொலீஸில் வழக்குத் தொடர, டாக்டர் மல்கோத்திரா இப்போது வழக்கில் மாட்டிக் கொண்டு தவிக்கிறார்.

அகதி முகாமில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காலி தபால் அலுவலகத்துக்குச் சென்றபோது அங்கே காலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தகநாயக்காவும் இருந்தார். உணவுத் திணைக்கள ஆணையாளருக்கு எனது உத்தியோகத்தர்கள் மீதுள்ள புகார்களை விவரிக்கும் தந்தியுடன் நின்றார் நான் விளக்கம் அளித்ததும் அத்தந்தியைக் கிழித்து எறிந்த அவருடைய நல்லியல்பை எண்ணிப் பார்க்கிறேன்.

தொழிலாளர் அன்பு

1983 ஆம் ஆண்டு கலவரத்தில் கொழும்பில் எனது உடைமைகள் அழிக்கப்பட்டன அவற்றுள் எனது புத்தகங்கள் அழிந்த துயரம் அதிகம் நேரு எழுதிய அவரது சுயசரிதை நூலில் அவருடைய கையெழுத்தையும் பெற்றிருந்தேன். அதனை இழந்த துயரம் இன்றும் என்னை வாட்டுகிறது.

நான் துறைமுக அதிகார சபை செயற்திட்ட முகாமையாளராக இருந்து ஓய்வுபெற்ற பின்னர் கலவரம் ஏற்பட்டது. இருப்பினும் என்னிடம் வேலை செய்த தொழிலாளர்கள் நான் கொழும்பு அகதி முகாமில் தாங்கியிருந்தபோது என்னை வந்து பார்த்து உணவுப் பொட்டலங்கள் தந்து ஆறுதல் கூறியதையும் நினைத்துப் பார்க்கிறேன்

அனைத்தும் இழந்த நிலையில் இருந்த எனக்கு அவர்கள் பதினேழாயிரம் ரூபா சேகரித்து அன்பளிப்பாகத் தந்தார்கள். தொழிலாளர்களின் அன்பை இந்தளவுக்கு என்னை அறியாமலே சம்பாதித்திருக்கிறேன் என்று இப்பொழுது மன ஆறுதல் அடைகிறேன்

நேர்மைக்கு கிடைத்த பரிசு

நான் திருகோணமலை துறைமுக அதிகாரசபை செயலூக்க முகாமையாளராக இருந்தபோது தமிழ்த் தலைவர் செல்வநாயகத்தின் மறைவு செய்தி கேட்டு கவலை அடைந்தேன்.

எமது நிர்வாக அலுவலகங்களிலும், அலுவலக வளவிலும் துக்கக் கொடிகள் ஏற்றப்பட்டு இருந்தன.

இதைக்கண்ட சுதந்திரக் கட்சி தொழிற் சங்கக் கிளைத் தலைவர் என்னைச் சந்திக்க வந்தார். அப்போது சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்தமையால் அவர் மிகவும் மிடுக்காகப் பேசி கொடிகளை உடனே இறக்க வேண்டும் என்றார்.

"டி. எஸ், டட்லி, பண்டா இறக்கும்போது கொடிகளை ஏற்றித் துக்கம் அனுஷ்டிக்கலாம் என்றால் அவர்களைப் போன்ற தேசியத் தலைவரான செல்வாவுக்கு இப்படி மரியாதை செய்வதில் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனது ஊழியர்களின் நடவடிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இக் கொடிகள் தொடர்ந்து பறக்கும்" என்று உறுதியுடன் விளக்கம் அளித்தேன்.

இதனைக் கேட்டு ஆத்திரம் அடைந்த அத்தொழிற் சங்கவாதி "நான் உமக்கு ஒரு பாடம் படிப்பிப்பேன்" என்ற அச்சுறுத்தலுடன் அங்கிருந்து வெளியேறினார்

அவ்வாறே மறுநாள் அவர் எனக்குப் பாடம் படிப்பித்தார். உடனடியாக என்னை கொழும்புக்கு மாற்றினார்கள்

இத்திடீர் மாற்ற உத்தரவு அநீதியாக வழங்கப்பட்டபோது மனங் கலங்கிய எனக்கு உலக மகாகவி செகப்பிரியரின் கவிதை அடிகள் தெம்பினைத் தந்தன. அவ்வடிகள் வருமாறு:-

"என்ன உலகமடா இது. ஒருவன் நல்லியல்பை நாடினால் அதுவே அவனுக்கு நஞ்சாகிறது!"

பேட்டி கண்டவர்:-
வே வரதசுந்தரம்

புத்தரின்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திரத்தில் இல்லையா? போலிக் கதர் வியாபாரத்தைப் போல் போலிப்பல் வியாபாரத்துக்கு ஒரு காலத்தில் கிராக்கி ஏற்பட்டிருக்கவில்லையா? கடைசியில் ஓர் இலங்கை மன்னன் ஒரு பல்லை மட்டும் வைத்துக் கொண்டு பாக்கிப் பல்லைஎல்லாம் உடைத்து எறிந்து விடவில்லையா?

இவ்வளவு போராட்டங்களுக்கும், ஏமாற்றங்களுக்கும் காரணமாயிருந்த ஒரு பல்லானது கேவலம் இரண்டு அங்குலம் நீளம் கூட இல்லை என்றால் அதனால் என்ன பிரயோசனம் என்று நீங்களே சொல்லுங்கள்.

[தொகுப்பு: புத்தொளி]

காலத்தால்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் விளைந்த கொலையும் அசோகன் மனதைப் பெரிதும் வாட்டின. போரையும் அதன் விளைவுகளையும் அவன் வெறுத்தான். இனிமேல் 'போர்' என்பதே கூடாது என்று அவனுக்கு தோன்றி விட்டது.

தென்கோடியில் ஒரு சிறு பாகம் நீங்கலாக இந்தியா முழுமையும் அவன் ஆளுகையில் இருந்தது. அதையும் வென்று சேர்த்துக் கொள்ளுவது அவனுக்கு மிக எளிதான ஒரு காரியமே!

ஆயினும் அவன் அவ்வாறு செய்யவில்லை. சரித்திரத்தில், வெற்றிக் பின் போர்த் தொழிலை விட்டொழித்த அரசன் அசோகன் ஒருவனே என்று ஆசிரியர் எச். ஜி. வெல்ஸ் கூறுகிறார்.

நமது நல்வினையின் பயனாக அசோகன் தனது எண்ணங்களையும் செயல்களையும் தன் சொந்த வார்த்தைகளிலேயே எழுதி வைத்திருக்கின்றான்.

தனது பிரசைகளும், பின் தலைமுறையாளர்களும் கூடக் கடைப் பிடிக்க வேண்டுமென்று அவன் பல கட்டளைகளைக் கல்லிலும் செம்பிலும் செதுக்கி வைத்துச் சென்றான்.

அலகாபாத் கோட்டையில் அத்தகைய அசோகன் தூண் ஒன்று இருப்பது உனக்குத் தெரியும். நமது மாகாணத்தில் அது போல் இன்னும் பல இருக்கின்றன.

போரினாலும் வெற்றியினாலும் விளைகின்ற கொடிய கொலைத் தொழிலைக் கண்டு அவன் அச்சமும் நடுக்கமும் இரக்கமும் எய்தியதை இந்தக் கட்டளைகளிலே அசோகன் தெரிவித்திருக்கின்றான்.

ஒருவன் தன் மனத்தைப் புலன்வழி செல்லாது அடக்குவதும். தருமத்தினால் பிறர் உள்ளங்களைக் கவர்வதுமே உண்மையான வெற்றியாகும் என்று அவன் கூறுகின்றான்.

(தொடரும்)

உறவுத்...

(5ம் பக்கத் தொடர்ச்சி, வையாகக் காணப்படுகின்றன.

ஈமோபிலியா என்னும் குருதி உறையாநோய் ஆண்களிலேயே காணப்படுகிறது. இந்த நோய்க்குரிய பரம்பரைக் காரணி இலிங்க நிறமூர்த்தத்திலேயே காணப்படுகிறது இந்த நோய் ஒன்றுவிட்ட சந்ததிகளிலேயே வெளிக்காட்டப்படுகிறது. அதாவது முதலாவது சந்ததியில் ஏற்படாது இரண்டாவது சந்ததியிலேயே வெளிக்காட்டப்படுகிறது. இரண்டாவது சந்ததியில் பிறக்கும் ஆண் குழந்தைகளில் ஐம்பது சதவீதமானவை இந்நோயினால் பாதிக்கப்படுகின்றன. முதல் சந்ததியில் உள்ள பெண்ணினாலேயே அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படுகின்றது. இப்பெண் காவிப்பெண் எனப்படுவாள். அதாவது நோயை தான் வெளிக்காட்டாது வழித்தோன்றலில் நோயை ஏற்படுத்தும் பெண் ஆவாள்

நிறக்குருடு (சிவப்பு நிறத்தையம், பச்சை நிறத்தையும் வேறு பிரித்தறிய முடியாத நிலை) ஈமோபீலியா (குருதி உறையாநோய்) ஆகியன இலிங்க நிறமூர்த்தத்திலுள்ள பரமபரை அலகினால் ஏற்படும் நோய்கள் ஆகும்.

தன் மூர்த்தத்தில் காணப்படும் பரம்பரை அலகினால் வெளிறி (தோல் வெள்ளை நிறமாக இருத்தல்), அல்கப்தோ நியூறியா (சிறுநீர் கறுப்பு நிறமாதல்) போன்ற குறைபாடுகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு பரம்பரை பரம்பரையாக வரும் நோய்களில்ஈமோபீலியா நிறக்குருடு. வெளிறி மட்டுமன்றி தொய்வு, எக்சிமா, சலரோகம், இதயநோய், முரண் மூளைக்கோளாறு என்பனவும் அடங்கும். ஆகவே பரம்பரை நோய்கள் காணப்படும் குடும்பங்களில் பிறப்புரிமையியல் பற்றி சிறந்த அறிவு ஏற்படவேண்டும். இரத்த உறவினரான மச்சான், மச்சாள் திருமணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். இரத்த உறவில்லாதோரை திருமணம் செய்தல்வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் தகுதியான காதல்களை அங்கீகரித்து அவர்களை ஒன்றுசேர்க்க வேண்டும். இதன் மூலம் பரம்பரை நோய்கள் வருங்கால சந்ததியினரிடையே ஏற்படாது ஓரளவு தடுக்க முடியும். *

பண்டிதமணி..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மெய்யெழுத்து நீங்கலாகப் பதினாறு எழுத்துக்கள் வருதல் வேண்டும். ஈற்றில் ஏகாரம்தொனித்தல் வேண்டும்" என்று பண்டிதமணி அவர்கள் சொன்னார்கள். "கொஞ்சம்பொறு, மெய்யெழுத்து விரவாமல் கட்டளைக் கலித்துறை பாடுகிறேன்." என்று உடனடியாகப் பாடிக் காண்பித்தார்.

அவர் பண்டிதமணி அவர்களைப் பார்த்து, "நீ பெரியவனாய் வருவாய் என்று எனக்கு எப்பவோ தெரியும். நீ நாளை தொடக்கம் கோயிலில் புராணபடனத்தில் பயன் சொல்ல வேண்டும். அது உனது குலவித்தைத் அது உனக்குப் பாரம்பரியமான முறையில் கைவரும் வா.' என்று பணித்தார் பண்டிதமணி அவர்கள் அருமையாகப் பயன் சொன்னதை அவரின் அருமைத் தந்தையார் சின்னத்தம்பி அவர்களும் அருகமர்ந்து கேட்டானந்தமடைந்தார். புராணபடனம் அந்தக் காலத்தில் பக்தி பரப்பியதோடு முதியவர் கல்விமுறையாகவும் நிலவியது.

பண்டிதமணி அவர்களுக்குப் படிப்பித்தலில் விருப்பமும் திறமையும் சார்பும் நிறைய இருந்தன ஆனால் அவர் பண்டிதர்ப் பட்டத்தோடு படிப்பிக்கப் போயிருந்தால் மாதம் இருபது ரூபா கிடைத்திருக்கும். எனவேதான் அவர் பயிற்றப்பெற்ற பண்டித ஆசிரியராய்ப் பணிசெய்ய விரும்பினார். அவரை ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யுமாறு அவரின் வழிகாட்டியாய நண்பன், உறவினன் நடராசா அவர்கள் ஆலோசனை கூறியிருந்தார்.

— வளரும்

போதை வஸ்துகளின் பாதிப்பு

உலகிலே மனித வாழ்க்கையைப் பாதித்து வருகின்ற காரணிகளில் முக்கியமானதாகப் போதை வஸ்து இன்று காணப்படுகிறது அந்தக் கொடிய நோய் எமது மக்கள் மத்தியில், குறிப்பாக இளம் சந்ததியினர் மத்தியில் தற்போது பரவிக் கொண்டுவரும் செய்தியைக் கேட்டதும் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்வதோடு, ஆழ்ந்த கவலையையும் உண்டுபண்ணச் செய்துள்ளது.

உரிமைப் போராட்டம் கூர்மையடைந்து வருகின்ற இக்காலகட்டத்தில் எமது போராட்ட சக்தியை திசை திருப்பி, போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் திட்டமிட்ட சதியாகவும் இச்செயல் அமையலாம். மாணவர்கள், இளைஞர் மத்தியில் போதைவஸ்து பழக்கம் பரவுமாயின் எமது பரம்பரையே அழிக்கப்பட்டு விடும் என்பதில் சந்தேகமில்லை. இப்பழக்கம் எமது சமூகத்தில் வேருன்றுமாயின் நாமே எம்மை அழித்து, எமது பொது எதிரிக்கு உதவுவதாக அமையும். ஒரு போதும் இந்நோய் பரவ நாம் அனுமதிக்க முடியாது.

ஹஷீஸ், கஞ்சா, LSD மாத்திரைகள், ஹீரோயின் போன்ற போதை வஸ்துக்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுவதாக அண்மைச் செய்திகள் கூறுகின்றன. யாழ்ப்பாணம், தெல்லிப்பளை வைத்தியசாலைகளில், பலர் போதைவஸ்துக்கு அடிமையாகி சிகிச்சை பெற்றுள்ளார்கள். சில மாதங்களுக்கு முன்னர் ஒரு வயது நிரம்பாத பச்சைக்குழந்தை ஒன்று ஹீரோயின் உண்டதால் யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சம்பவம் அதன் பாவனையின் நிலையை எமக்கு எடுத்துக் காட்டுவதோடு, அதிர்ச்சியுறவும் செய்கிறது.

போதைவஸ்து பாவிப்பதால் உண்டாகும் பலாபலன்களையும் அதன் அறிகுறிகளையும் பார்ப்போம்.

ஹீரோயின்- Brown Sugar

1. சம்பந்தப்பட்டவரின் உணவு, உறக்கம் என்பவற்றில் மாற்றம் காணப்படும்

3 பசி இருக்காது.

2. உடை உடுக்கும் முறையில் மாற்றம்.

4. இனிப்புக்களில் கூடுதலான நாட்டம்.

5. ஒரு கணம் கலகலப்பாக இருப்பவர்கள், திடீரென மௌனிப்பர்.

6. கண்களில் இலேசாகத் தொய்வு, வாய் கொஞ்சம் திறந்தே இருக்கும்.

7 இலேசாகத் திக்குவதோ, குரல் பிசிறடிப்பதோ இருக்கக் கூடும்.

8. நிறை விரைவாகக் குறையும்.

9. அடிக்கடி தனி அறையில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்வர்.

10. வீட்டில் பணம், பொருள்கள் காணுமல் போகும்.

விளைவுகள்

1. பாவித்த உடனேயே விஷம் காரணமாக இறப்பர்.

2 உபயோகிக்க ஆரம்பித்த நாலு நாட்களில் ஒருவரைத் தன் வசப்படுத்திவிடும்.

3 இந்தக் கொடிய விஷம் விரைவிலேயே இருமல், சளி, சளியில் இரத்தம், நுரையீரல் ஓட்டைகள், கசம் போன்றவற்றை ஏற்படுத்தும்

4. நிபுணர்கள் கூற்றுப்படி மரணத்தை உண்டுபண்ணும்.

கஞ்சா - Marijuana

1. இதயத்துடிப்பின் வேகம் கூடும்.

2. கண்கள் சிவக்கும்.

3 தொண்டை வரண்டு, வேதனைக்குள்ளாவர்.

4 உணர்ச்சி வசப்படுவது குறையும்.

5. ஐந்து அல்லது ஆறு மணித்தியாலங்களுக்கு அதன் தொழிற்பாடு மனிதனை சமநிலைக்குக் கொண்டுவர விடமாட்டாது. தொடர்ந்தும் அதில் நாட்டத்தை ஏற்படுத்தும்.

6 தொடர்ந்து பாவித்தால் நிரந்தரமாகவே கஞ்சாவின் துணை தேவைப்படும்.

விளைவுகள்

1. எதிலும் பற்றில்லாத அசமந்த நிலைக்கு மனிதனைக் கொண்டுவிடும். - பிரதான குணமாகக் கொள்ளலாம்.

2. வேண்டாத சந்தேகம், பொய்யான கற்பனைகளைத் தோற்றி மனதை தன்வயப்படுத்தும்,

3. மூர்க்கத்தனம் தோன்றும்.

மாத்திரைகள் - LSD

1 உபயோகித்த 20 - 30 நிமிடங்களில்

[8ஆம் பக்கம் பார்க்க)

கம்பன் கவிவண்ணத்தில்....

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

கடமை அவருடையதல்லவா! அதனுல், அவருக்குத் தெரியாமலே அந்த அரசியற் சதிக்குட் கம்பரும் உட்பட்டுவிடுகின்றுர்!

முதலில் மெல்லிதாகச் சொல்லித் தோல்வியைக் கண்டாலும் தன் மனம் சிறிதும் தோற்றுவிடாது, கைகேயியின் கால்களில் வீழ்ந்தேனும் கருத்தைக் கவர்ந்து, அவளுடைய உள்ளத்தைத் தொடத்தக்கவாறு மகன், தந்தை தாய் சுற்றத்தார் ஆகியோரைப்பற்றிப் பேசுவதன் மூலம் அத்தூயவளது உள்ளுணர்வைத் தூண்டி, தன் கருமத்தைச் சரிவர முடிக்கும் சிறந்ததொரு சூழ்ச்சிக்காரியாக மந்தரையைப் படைத்து விடுகின்றுர் கம்பநாடர். இதிலேதான் அவருடைய வெற்றியும் தங்கிக் கிடக்கின்றது.

கம்பர் மந்தரையின் வாயினுற் கைகேயியினுடன்புரியும் வாதங்களோ ஆழ்ந்த உலக ஞானம், நல்ல அரசியல் ஞானம், அகன்ற மனிதகுல உளநூல் ஞானம் என்பவற்றிலெல்லாம் பேர்போன ஒருவராக அவரை நமக்குக் காட்டுகின்றன.

அதே நேரத்தில் அவ்வாதத்துக்கு எதிர்வாதம் ஒன்றைத் திறம்பட நடத்த வேண்டிய கைகேயியின் வாயிலும் அறிவு விளக்கொன்றினைக் கொடுத்து, கம்பர் அவளுக்கும் ஆற்றல் ஊட்டுகின்றுர்.

'நிராயுதபாணி'யான எதிரிக்குக் கூரிய ஆயுதங்களை உதவி, பின் அவரோடு போர் செய்து வெற்றிப்புகழீட்ட முயல்கின்ற சுத்த வீரர்களது நிலையே இந்த அரசியற் சதியைச் சரிவர நடத்தி வெற்றிகண்ட பெரிய திறமைசாலியான கம்பரது நிலைக்கு ஒப்பதாகும்.

அதனுற் கம்பரது புலமை கைகேயியினது வாயினுல் வெளிப்பட்டு மந்தரையைச் சரிவர எதிர்த்து நின்று வாதிடுகின்றது கம்பனது இதயத்துக்கும் மனத்துக்கும் இடையில் எழுந்த போராட்டந்தான் அது!

முடிவில் ஒரு கட்சிக்குத்தானே வெற்றி வரலாகும்! மந்தரை வெல்லுகின்றுள். ஆனல், கைகேயி தோல்வி அடையவே இல்லை என்கின்றுர் கம்பர்.

இராமாயண காவியத்திலே கம்பன் படைத்துக் காட்டுகிற அரசியற் சதியின் ''மர்மம்'' இங்கேதான் பொதிந்து கிடக்கின்றது.

அரக்கர் பாவமும்
அல்லவர் இயற்றிய
அறமும் துரக்க
நல்லருள் துறந்தனன்
தூமொழி மடமான்''

-என்பது இதனைக் குறிக்கும் கம்பனது கவிதைப்பகுதி.

குவிந்த பாவத்திரள்

அரக்கர் நல்லோர் குலத்துக்கு ஓயாது இழைத்து வந்த இன்னலால் விளைந்து மலைபோற் குவிந்திருக்கும் பாவத்திரள்; அவ்வரக்கரை மடித்துத் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று நல்லோர் இறைவனை நோக்கிச் செய்த பெருந்தவத்தின் சக்தி; இரண்டும் ஒருமித்து நின்று கைகேயியின்மீது பலமாக மோதினுல் அவளால் அவற்றை எதிர்த்து வெல்ல முடியுமா?

எனவே அவையிரண்டும் செய்த சதியால், மந்தரையின் சதிக்குள்ளே கைகேயியின் நன்மனமும் சிக்கலாயிற்று.

கைகேயியைத் ''தூமொழி மடமான்'' என்று கம்பர் இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிடும் தொடரானது, கைகேயியினுடைய சிறந்த நல்ல பண்புகளுக்கு எல்லாம் சான்று பகர்ந்து, பொதுமக்களாகிய நமது நீதிவிசாரணை மன்றிலிருந்த குற்றவாளிக் கூண்டிலிருந்து அவளுக்கு விடுதலை வழங்குகின்றது.

சதிக்கு உடந்தை அல்லள்

அவளுடைய விவாதத்துக்கு வேண்டிய நற்கருத்துக்களையும் எடுத்துக் கொடுத்த கம்பன், கைகேயியின் மனமாற்றத்தினுலே அரக்கர் அழியவும், இராமபிரானது பரந்த புகழினை நாமறியவும் முடிந்ததென்று கூறி, தான் அந்தச் சதிக்கு உடந்தையுமல்லன் என்பதை உண்மைப்படுத்திக் குற்றத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுகின்றுன்.

எனவே மந்தரை மட்டும் தான், அந்த அரசியற் சதிக் குற்றத்துக்கு ஆளாக வேண்டியவளாகின்றுள்.

தீர்ப்பும் சரிவர வழங்கப்படுகின்றது. நாடு கடத்தற் தண்டனை! மந்தரையானவள் இராமாயண காவியமாகிய பேருலகினின்றும் அடியோடு அகற்றப்பட்டு விடுகின்றுள். பிறகு அவளைப்பற்றிப் பேசுவார் யாருமிலர்!

சார்ளி சாப்ளினுக்கு.....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பையில் வந்தது?

நான் கடிகாரத்தைக் காரியதரிசியிடம் கொடுத்து பொலீஸுக்கு அனுப்பச் சொன்னேன். மூன்றும் நாள் தபாலில் எனக்குக் கடிதம் வந்தது.

''அன்புள்ள சார்ளி சாப்ளின் அவர்களே! இந்தக் கடிதத்தைப் பெயர்போன ஜேப்படிக் கள்ளன் ஒருவன் எழுதுகிறுன்... நேற்று நான் கடைத்தெரு வழியே போய்க் கொண்டிருந்தேன். என் வழக்கப்படி ஒரு மனிதனின் சட்டைப் பாக்கெட்டில் இருந்து கடிகாரத்தை எடுத்தேன். உடனே உங்களைச் சந்தித்தேன். நான் உங்கள் விசிறிகளில் ஒருவன். உங்களுக்கு ஏதாவது பரிசு தர வேண்டுமென்று நினைத்தேன் நல்லவேளையாக உங்களுக்கு இந்தக் கடிகாரத்தைக் கொடுக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது உங்களிடம் சொல்லிவிட்டுக் கொடுப்போம் என்றுல் நீங்கள் நிச்சயம் இதை வாங்க மாட்டீர்கள் என்று தெரியும். அதனுல் ஒருவனின் பாக்கெட்டிலிருந்து எப்படித் தெரியாமல் எடுத்தேனே அதே போன்று உங்கள் பாக்கெட்டில் தெரியாமல் போட்டு விட்டேன்.

ஆதாரம்: மஞ்சரி.

பிரயாண
ஒழுங்குகள்

✶ ஹொலண்ட்
✶ பெல்ஜியம்
✶ பிரான்ஸ்
✶ ஜேர்மன்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்

பாஸ்போட், விசா,
பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

INTERSUN
GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

எலிகளை கட்டுப்படுத்த......

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

புழுக்களை உண்ணும்.

எலிகள் உணவு இல்லாமல் 22 நாட்கள் வரை சீவிக்கும் அத்தகைய இயற்கைப் பாதுகாப்பும் அதற்குண்டு.

இனப்பெருக்கம்

ஓர் ஆண்டில் 2-3 முறை எலிகள் குட்டி போடும். செப்டெம்பர்- அக்டோபர் மாதத்தில் இனம்பெருகும். ஒருபெண் எலி ஓர் ஈற்றில் சுமார் 10 குட்டிகள் போடும் குட்டிகள் முழுவளர்ச்சியடைய 3மாதம் செல்லும்

மூன்று மாதத்தின் பின் அவை இனப்பெருக்கத்திற்குத் தயாராகும்.

ஒரு சோடி எலிகள் ஓர் ஆண்டில் சுமார் 250 எலிகளை உருவாக்கும் என்றுல் அவற்றின் பெருக்க விதத்தைப் பார்த்துக்கொள்ளுங்களேன்.

கட்டுப்படுத்துதல்

பின்வரும் முறைகளினுல் எலிகளைக் கட்டுப்படுத்தி அழிக்கலாம்.

1. எலிப்பொறிகள் மூலம் கட்டுப்படுத்தல்.

2. எலிகள் உட்புகாத அறைகளை அமைத்துக் கொள்ளுதல்.

3. அயற்புறங்களைச் சுத்தம் செய்தல்.

4 வயல், தோட்டங்களில் உள்ள வளைகளை, வெட்டி அகற்றுதல்

5. இயற்கை விரோதிகளை அழியாமல் காப்பாற்றுதல்.

உதாரணம்: பாம்பு,பூனை காட்டுப்பூனை.

6. வரம்புகளின் அளவைக் குறைத்தல்.

7. நெல் அறுவடை முடிந்தவுடன் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து ஒரே நேரத்தில் எலி வளைகளை அகற்றி எலிகளைப்பிடித்து அழித்தல்

8. இரவில் வெளிச்சம் கொளுத்தி எலிகளை அடித்துக்கொல்லுதல்.

9. இரசாயன மருந்துகளைப் பாவித்தல்.

இரசாயன மருந்துகள்

1 சிங் பாஸ் பைட்டு மருந்தின் ஒரு பங்கை 49 பங்கு எண்ணெயில் வறுத்த உணவுடன் கலந்து வயல்களில் ஓர் ஹெக்ரரில் 40 இடங்களில்—நீர்படாமல்— எலிகள் வந்துபோகும் வழியில் வைக்கவும். 4-5 நாட்களின்பின் உணவுகளை மாற்றவும்.

முக்கியமாக எலிப் பாசாணம் வைக்கமுன் 6-7 நாட்களுக்கு சாதாரண உணவை வைக்கவும். இதனுல் எலிகள் சந்தேகமில்லாமல் உணவை உண்ணும். நச்சுணவை வைக்கும் பொழுது கூட்டமாக வந்து உணவைச் சாப்பிட்டு வேறு இடங்களில் சென்று இறந்துவிடும்.

வீடுகளில் கீழ்வரும் இரு இலகுவான முறைகளில் எலிகளைக் கட்டுப்படுத்தலாம்.

1. சீனிப்பாணியில் பஞ்சைத் தோய்த்து பின் சர்க்கரையுடன்சேர்த்துச் சிறுசிறு உருண்டைகளாக்கி எலிகள் வரும் வழியில் வைத்தால், அவைகள் அவற்றை உண்ணும். உண்ட எலிகள் இறந்து விடுகின்றன.

2. அலரி விதைகளின் பருப்பை எடுத்து மாவாக்கி, சர்க்கரையுடன் கலந்து சிறு குருணைகளாக்கி எலிகள் வரும் வழிகளில் வைத்தால், அவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த விதைப்பருப்பு மிக நஞ்சானது. ஆகவே குழந்தைகளுக்கு எட்டாத இடங்களில் இவற்றை வைக்கவேண்டும்.

இந்தமுறைகளில் எலிகளைக் கட்டுப்படுத்தி எலிகளால் ஏற்படும் சேதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். ✶

அரசின் அதிகாரங்களையே....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகளுக்கும் தெரிவு நடக்கும். ஆகவே ஒவ்வொரு மாகாண சபையும் அவ்வப் போதைய நாடாளுமன்றத்தின் ஒரு கிளையே தவிர - அம்மாகாண மக்களின் ஆட்சி உரிமையைப் பேணும் சபைகளாகா.

ஜனுதிபதிக்கு வரம்பற்ற அதிகாரம்

இவை மட்டுமல்ல. மாகாண சபைகளுக்கு கட்டளை வழங்கவும் - அவற்றை நெறிப்படுத்தவும் - ஏன் அவற்றைக் கலைக்கவுமான அதிகாரம் ஜனுதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றைப் பார்க்கும் பொழுது ஜனுதிபதியின் புதிய திட்டத்தின்படி முன் சொன்ன ஒப்பந்தங்களில் வழங்க ஒத்துக்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி இப்பொழுது மறுக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு விடயத்திலும் மாகாணங்களுக்கு மட்டுமே முழுமையான அதிகாரம் வழங்கப்படவில்லை. மொத்தத்தில் ஜனுதிபதியின் புதிய திட்டம் அவரதும் - அரசினதும் அதிகாரங்களை வலுப்படுத்த வரையப்பட்டனவே தவிர, எவ்வகையிலும் தமிழ் மக்கள் தமது தாயகத்தில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரத்தையாவது பெற வழி செய்யவில்லை.

அவர் ஆட்சியைக் கைப்பற்றி அரசியல் அமைப்புத் திட்டத்தை மாற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதியாக வந்தபின் ஒரு கூட்டத்தில் பேசும்போது 'நாடாளுமன்றம் என்னை ஓர் அரசனுக்கி இருக்கிறது. ஆனல் நான் மக்கள் சேவகனே!' என்ருர்.

தமிழர்கள் அவரது திட்டங்களை ஏற்ருல் 'அரசனுன என்னைத் தமிழர்கள் பேரரசன் ஆக்கியே விட்டார்கள்' என்று சொல்வாரோ என்னவோ தெரியாது.

(முற்றும்)

சிவப்பயன்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்த காலத்தில் கடல்கோள் நிமித்தத்தால் தண்டமிழ் வேத (அறிவு) நூல்கள் மறைந்ததால் வந்தவரின் வடமொழிச் சிவசமய நூல்களை ஒருவாறு ஏற்றுச் சிவசமயத்தை வைதிக சமயமாக வாழப் பழந்தமிழர் இடம் அளித்தனர். இதுவே தென்நிலத்திலும் வடமொழியும் சமய மொழியாகச் சால்புற்றது.

வடமொழியோ ஒலி வடிவாகவே தென்னிலத்திலும் நின்றது. இதனுலேயே இதனை எழுதா மறை என்பர். இம் மறையின் பொருள் விளக்கமும் அதன் தெய்வீக விளைவும் ஒலியையே மையமாகக்கொண்டது. பொருளுக்கேற்ப ஒலிமுறையை [illegible] ஓதாவிட்டால் தெய்வீக விளைவு பிறக்கமாட்டாதாதலின் அவ் ஒலிவுரை வெற்றுரையாகும். எனவே சமயக் கருத்துப் பொருள் சிறந்து பயன்பெற வேண்டின் ஒலிவடிவம் உண்மைப்படல் வேண்டும். இந்தத் திறனை இன்றைய சமயக்கிரியைவாணரிடத்து நிலைப்படாதிருத்தல் பகிரங்க இரகசியம். எனவே அம்மொழியைச் சைவக்கிரியைகளில் ஆளுதலால் என்ன பயன்? எனவே சத்திநிபாதப் பெற்றியால்முத்திநிலைகொண்ட நம் நால்வர் பெருமக்கள் தோத்திர நெறியில் திருவாய் மலர்ந்த தெய்வப் பாடல்களை நம் சமயக் கிரியையில் புகுத்தல் - நிலைநாட்டல் பெரி[illegible] கடன்.

சொற்சிலம்பம்

போட்டி இல. 27

1		2		3	4		■
	■		■	5		■	6
7	8		■		■	9	
10		■	11		12	■	
■	13	14		■	15	16	
17	■	18		■	■		■
19	20			■	21		
■	22		■	23			■

அனுப்புவோர் பெயர்! ....

விலாசம்! ....

....

ஒப்பம்! ....

இடமிருந்து வலம்

1. அழியாமை
5. எதிரி
7. இருபத்தொன்று
9. இசைப்பாட்டு
10 திட்பம்
11. இப்போது தாய்மார் நாடுவது இதனைத்தான்
13 இராமன் காடேகக் காரணகர்த்தா
15. சைவர்களின் கடவுள்
18. வருகை
19. சுகம்
21. இராமன் மகன்
22. இறுதி எழுத்துச் சேர்ந்தால் தென்னை மட்டையில் இருந்து பெறுவது வரும்
23. கைவேலை

மேலிருந்து கீழ்

1. சம்மதம்
2. சோறுடன் சேரும் நீர்ப்பதார்த்தம்
3. பச்சடி
4. மக்கள் மீது விதிக்கப்படுவது
6. தோழன்
8. ராசி
11. பொழிப்புரை
12. ஒரு மாதம்
14. அற்பம்
16. மாயம்
17. அழகு
20. நான்கு
21. ஒருங்குசேர்

போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.

3 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

5 வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்

6 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 27. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

✶ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறுர்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரில் இருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறுர்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

சொற்சிலம்பம் இல. 25

வெற்றி பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- க. பிறேமலதா,
C/o கனகரத்தினம்,
மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.

இரண்டாம் பரிசு:- எம். பீ. நாஸித்,
89, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

மூன்றும் பரிசு:- கே. ராஜகோபால்,
''பொன்மனை''
தொல்புரம்,
சுழிபுரம்.

✶ பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்

சொற்சிலம்பம்
இல . 25
விடைகள்

இடமிருந்து வலம்

1. வந்தேமாதரம் 5. கதி 7. மதம் 9. பதி 10. திரி 11. ஓம்பு 13. சுவர் 15. விதம் 18. சமன் 19. சோபனம் 21. தாகம் 22. ரம் 23. கூவும்

மேலிருந்து கீழ்

1. வருமதி 2. தேகம் 3. தனம் 4. ரதி 6. புதினம் 8. தரிசு 11. ஓர்மம் 13. புலி 14. வசனம் 16. தங்கம் 17. திசோ 20. பர 21. தாவு

நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீலசோப்பை
வாங்கி உபயோகியுங்கள்!
100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக் கொடுத்து 1 பனை ஓலைத் தொட்டியைப் பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி

02- 07 - 1986 சனிக்கிழமை

மலிவு விற்பனை
4.8.86 மாவிட்டபுரம் தேர்த்திருவிழா அன்று தெற்கு வீதியில் உள்ள மில்க்வைற் காட்சிச் சாலையில் மில்க்வைற் தயாரிப்புகளை ரூ 15/= க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும் வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரை விதைகளும், அறிவு நூல்களும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
— மில்க்வைற் யாழ்ப்பாணம்

சோவியத் தலைவரின் உத்தரவாதம் உரியபடி நடைமுறைக்கு வருமா?

உலக உலா

என்.பி.சீலன்

ஆப்கானிஸ்தான் விவகாரம் மீண்டும் சர்வதேச அரங்குக்கு வந்திருக்கிறது.

இதற்கு இவ்வாரம் இடம்பெற்ற இரு நிகழ்வுகள் காரணம் ஆகும்.

ஒன்று — ஆப்கானிஸ்தானில் உள்ள சோவியத் படைகளில் ஆறு பிரிவுகளை வருட இறுதிக்குள் வாபஸ் பெறப் போவதான கடந்த திங்கட்கிழமை சோவியத் அதிபர் மிக்கேயல் கோர்பச்சேவ் விடுத்த அறிவிப்பு.

மற்றது — புதன்கிழமை மீண்டும் ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா. தலைமையிலான ஆப்கானிஸ்தான் — பாகிஸ்தான் பேச்சுவார்த்தை.

உலகில் நெருக்கடி உள்ள பிரதேசங்களில் ஒன்றான ஆப்கானிஸ்தானை இந்த நிகழ்வுகள் இரண்டுமே மீண்டும் சர்வதேச அரங்கில் இழுத்து விட்டுள்ளன.

அடுத்தடுத்து புரட்சிகள்

ஆசியாவில் சோவியத் எல்லையில் உள்ள முஸ்லிம் நாடான ஆப்கானிஸ்தான் 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் மன்னர் ஆட்சி நாடாக இருந்து வந்தது.

1978 ஆம் ஆண்டு நடந்த திடீர் புரட்சியின் போது ஓரளவு மாக்ஸிஸ ஆதரவுச் சக்திகள் அங்கு அரசாங்கம் அமைத்தன. மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த அரசு அமெரிக்க ஆதரவு புரட்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டின் இறுதியில் நடந்த மூன்றாவது திடீர் புரட்சியில் தீவிர சோவியத் ஆதரவாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

அதே கையோடு சோவியத் யூனியன் தனது படைகளையும் ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்பி வைத்தது.

அன்றிலிருந்து இன்று வரை சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளன. ஆப்கன் தலைமைப் பீடத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் சோவியத் ஆதரவு அரசாங்கம் தனது அதிகாரத்தை அங்கு இறுக்கிக் கொண்டுள்ளது. லட்சக்கணக்கானோர் அகதிகளாக பாகிஸ்தானுக்குள் வந்துள்ளனர்.

சோவியத் அதிபர் மிக்கேயல் கோர்பச்சேவ் சைபீரிய நகரான விளாடிவொஸ்ரொக்குக்கு கடந்த திங்கட்கிழமை விஜயம் செய்த போது படை வாபஸ் பற்றி அறிவித்திருந்தார்.

நஜிவுல்லா கருத்து

ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முதலாவது நடவடிக்கையாக படை வாபஸை ஆப்கானிஸ்தான் தலைவர் நஜிவுல்லா வர்ணித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீது பிரகடனப்படுத்தாத யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவும் பாகிஸ்தானும் எதிர்ப்பைக் கைவிட்டாலேயே அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நஜிவுல்லா அறிவித்துள்ளார்.

சோவியத் — ஆப்கானிஸ்தான் தலைவர்களின் இந்த அறிவிப்புக் குறித்து பாகிஸ்தான் ஓரளவு திருப்தி தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் — ஆப்கன் அரச படைகளுக்கு எதிராக சண்டை நடத்தி வரும் முஸ்லிம் கிளர்ச்சிக்காரர்கள் சோவியத் அறிவிப்பில் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கம்பூச்சியாவில் இருந்து தனது படைகளை வாபஸ் பெறுவதாக வியட்நாம் அறிவித்திருந்தது ஆனால் கடைசியில் நடந்தது எல்லாம் வெறும் படைப் பரிமாற்றமே என்று முஸ்லிம் கிளர்ச்சிக்காரர்கள் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவும் இதனைப் பெரிது படுத்தாது கோர்பச்சேவின் படை வாபஸ் அறிவிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஜெனிவா பேச்சு

கடந்த புதன்கிழமை ஆப்கானிஸ்தான் சம்பந்தமான சமாதானப் பேச்சுக்கள் ஜெனிவாவில் மீண்டும் ஆரம்பமாகி இருந்தன.

ஐ.நா. பொதுச் செயலாளர் பாவியர் பெரேஸ் கியூலரின் பிரதிநிதியான ஈகுவடோரைச் சேர்ந்த டிகோ கோர்டோவெஸ் இப்பேச்சுவார்த்தையில் 'புரோக்கர்' ஆகப் பங்கு பற்றுகிறார்.

இதற்கு முன்னைய சந்திப்பு கடந்த மே மாதம் 13ஆம் திகதி நடைபெற்றிருந்தது. அந்த இரண்டுவாரகால சந்திப்பின் முடிவில் ஐ.நா. பிரதிநிதி டிகோ கோர்டோவெஸ் கருத்துத் தெரிவிக்கையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இன்னும் நீண்ட இடைவெளி இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

ஜெனிவாப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாவதற்கு இரு தினங்கள் இருக்கும் போது படை வாபஸ் பற்றி சோவியத் அதிபர் அறிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை அகற்ற ஓரளவாவது இது உதவும் என்று நம்பப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள முழு சோவியத் படை வீரர்களின் எண்ணிக்கை பற்றித் தெரிவிக்காமல் 6 படைப் பிரிவுகளின் வாபஸ் பற்றி மட்டும் சோவியத் அதிபர் அறிவித்திருப்பதே இந்த நடவடிக்கை குறித்து மேற்கு நாடுகள் சந்தேகம் கொள்ளக் காரணம்.

பொதுவான கணக்கெடுப்பின்படி ஆப்கானிஸ்தானில் உள்ள சோவியத் படை வீரர்களின் எண்ணிக்கை 1லட்சத்து 18 ஆயிரம் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த வருட இறுதிக்குள் வாபஸ் ஆகும் 6 பிரிவுகளிலும் குறைந்தது ஏழாயிரம் படைவீரர்கள் மட்டுமே இருப்பர் என்று கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள சோவியத் படைகள் நான்கு வருடகாலத்தில் படிப்படியாக வாபஸ் பெற வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் கருதுகிறது.

மூன்று அல்லது நான்கு மாத காலத்துக்குள் வாபஸ் வேண்டும் என்பது பாகிஸ்தானின் கோரிக்கை.

ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் இதுவே முக்கியமாக ஆராயப்பட்டு வருகிறது.

இந்தியாவும் சிக்கலில்

ஆப்கானிஸ்தான் பிரச்சினை பாகிஸ்தானை மட்டும் இன்றி இந்தியாவையும் சிக்கலில் மாட்டிவிட்டிருக்கிறது.

ஆப்கன் பிரச்சினையை வைத்து பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை வாங்கிக் குவித்து வருகிறது.

இது இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் ஒன்றாகும்.

ஏற்கனவே அருணாசல் பிரதேசத்தில் உள்ள மக்மோகன் எல்லைப்பகுதியில் சீனப் படைகளின் அத்துமீறல் இருந்து வருவது இந்தியாவுக்கு புதிய தலையிடியை அளித்து வருகிறது.

உச்சிப் பேச்சு

இவ்வருட இறுதியில் அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகனும் சோவியத் அதிபர் மிக்கேயல் கோர்பச்சேவும் சந்திக்கும் சாத்தியம் இருந்து வருவதால்—

அதற்கு முன்னர் ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக சோவியத் யூனியன் மேலும் சில நடவடிக்கைகளை எடுக்கலாம்—

சீனவுடனான உறவிலும் சோவியத் யூனியன் தற்போது அதிக அக்கறை காட்டி வருவதால் நல்லுறவுக்குத் தடங்கலாக உள்ள 3 விவகாரங்களில் ஒன்றான ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கும் சுமுகமான ஒரு தீர்வு காண்பதில் சோவியத் யூனியன் அதிக அக்கறை காட்டலாம்.

ஏற்கனவே சீன எல்லையில் உள்ள மொங்கோலியாவில் உள்ள 25 ஆயிரம் சோவியத் படையினரில் ஒரு பகுதியினரை வாபஸ் பெறப்போவதாக கோர்பச்சேவ் அறிவித்திருப்பது சீனவுடனான நல்லுறவைக் கருதியே.

ஆகவே வருட இறுதியில் நடைபெறப்போகும் சோவியத் அமெரிக்க உச்சிப் பேச்சுக்களின் முன்னர் சர்வதேச அரங்கில் சில ஆச்சரியமான சம்பவங்கள் நடக்கலாம்

இன்று நடப்பவை

கம்பன் விழாவில்

யாழ்ப்பாணம், ஆக 2

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றது.

நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் இன்றைய விழாவிற்கு பண்டிதர் க. சச்சிதானந்தம் தலைமை வகிப்பார்.

மாலை 4.30 மணியளவில் ஆர். புண்ணியமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும்.

கவிஞர் வே. ஐயாத்துரை தொடக்கவுரை நிகழ்த்துவார்.

6.00 மணியளவில் 'கம்பன் தலைமையில் கவிஞர்கள் கூடி நம் நாட்டின் நலிவுகள் சொல்வர்' எனும் பொருளில் கவியரங்கம் இடம்பெறும்.

இக்கவியரங்கிற்கு கவிஞர் இ. முருகையன் 'கம்பனாக' தலைமை தாங்குவார்.

'வள்ளுவனாக' கவிஞர் கஞ்சாடசரம் 'இளங்கோவாக' கவிஞர் கல்வயல் குமாரசாமி, 'பாரதிதாசனாக' கவிஞர் ஜெயசீலன், 'திருநாவுக்கரசராக' கவிஞர் பதமநாதன், 'பாரதியாக' கவிஞர் நடனசிகாமணி 'கண்ணதாசனாக' புதுவை இரத்தினதுரை ஆகியோர் கவியரங்கில் கலந்து கொள்வர்.

4 நாடகங்கள் மேடையேறுகின்றன

உடுவில், ஆக 2

இன்று ஒரே இரவில் பாரதியார் சன சமூக நிலையக் கட்டட நிதிக்காக நான்கு நாடகங்கள் மேடையேறுகின்றன.

ஊரெழு மேற்கு முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் சுமைதாங்கி, விடிவு தேடும் ஏழைகள், தியாக தீபம், இடிந்த கோவில் ஆகிய நான்கு நாடகங்களுமே மேடையேற்றப்படுகின்றன

(உ-27)

நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக 2

இனஒதுக்கல், மானிட மீட்பு, சமாதானம் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட புனித பிரான்சிஸ் அசிசியார் நாடக நூல் வெளியீட்டுவிழா, இன்று பாஷையூர் — புனித அந்தோனியார் பெண்கள் பாடசாலையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ் ஆயர் அதி வந். யோகுப்பிள்ளை' யாழ் அரசாங்க அதிபர். வி. எம். பஞ்சலிங்கமும் பங்கு கொள்கின்றனர்.

போதை.....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மனநிலையையும் மூளையையும் பாதிக்கும்.

2 இல்லாததை இருப்பதுபோன்று கற்பனை பண்ணவைக்கும்

விளைவுகள்

1 இல்லாத கற்பனையைத் தருவதன் மூலம் தற்கொலை செய்யத் தூண்டும். மாடியில் இருந்து குதிக்கவும் பலரைத் தூண்டியிருக்கிறது என்பது நிபுணர்களின் ஆராய்ச்சியில் இருந்து தெரியவந்துள்ளது

எக்காரணங்களுக்காகப் பழகுவோரும் என்று தம்மை நியாயப்படுத்திக் கொண்டாலும், இவர்களில் 90 வீதமானவர்கள் இப்பழக்கத்தில் இருந்து மீளமுடியாது என்பது ஆய்வாளர்களின் கருத்து. அமெரிக்காவில் 1970-ம் ஆண்டு போதைவஸ்துக்கு அடிமையாகி அதிலிருந்து தம்மை மீட்டுக்கொள்ள முடியாத இரண்டு பதினாறு வயது நிரம்பிய பிள்ளைகள் ''திருந்த முடியாத தங்கள் வாழ்வில் அர்த்தம் இல்லை'' என்று தற்கொலை செய்து கொண்ட சம்பவம் உலகையே அதிரவைத்தது.

போதைவஸ்து பழக்கத்துக்கு அடிமையானவர்கள் பணக்கஷ்டம் ஏற்படும்போது பிழையான வழிகளைக் கையாண்டு இறுதியில் தங்களை அழித்துக் கொள்பவர்களாகவே ஆகிவிடுகின்றனர்.

நன்றி 'நங்கை'

அமரர் பண்டாரநாயக்காவின் அரசியல் மனைவியாக மாறுவதற்கு முயற்சிக்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர்.

காரியம் சித்திக்குமா?

தேசியத் தலைவரை மாற்றி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா வெற்றி பெறுவாரா?

அரசியல் உலகமும் அவரின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இருக்கிறது.

திரு ஜெயவர்த்தனாவின் அரசியல் வாழ்வை இன்று, நேற்று தொடங்கியது அல்ல.

42 ஆண்டுகளுக்கு முன்னர் சட்டசபைக் காலத்தின் ஆரம்பித்தது. அவரின் அரசியல்,

30 வயதினிலே

தனது 30 வயதிலே தனிச் சிங்களம் தான் நாட்டு அரசகரும மொழியாக இருக்க வேண்டும் என்று சட்டசபையிலே பிரேரணை கொண்டுவந்தவர்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நான்கு முறை நிதி அமைச்சர் பதவியை வகித்தவர். எவ்வளவோ பிரயத்தனங்களின் மத்தியில் 1977 இல் பிரதமர் பதவியைப் பிடித்தார்.

1956 இல் பதவியைப் பிடிப்பதற்காக திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வரப் போவதாக அறிவித்தார்.

உடனே யு. என். பியும் தனது சமஅந்தஸ்து மொழிக் கொள்கையை தனிச் சிங்களக் கொள்கையாக மாற்றிக் கொண்டு விட்டது. இதற்கு மூலகாரணமாக இருந்தவரே திரு ஜெயவர்த்தனா.

இதைத் தொடர்ந்து ஏற்பட்ட மொழிப்பிரச்சினையைத் தீர்க்க திரு பண்டாரநாயக்கா, 1926 இல், தான் சொன்ன மாகாண சுயாட்சி முறையை அடிப்படையாக வைத்து 1957 இல் பண்டா — செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எழுதப்பட்ட முதல் ஒப்பந்தம் அது. அதைக் கிழித்தெறியப் பாடுபட்டவர் தான் திரு. ஜெயவர்த்தனா.

மகாசங்கத்தை அரசியலுக்குள் இழுத்து ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தார்.

திரு ஜெயவர்த்தனாவே மகாசங்கத்தை முதன் முதலாக அரசியலுக்குள் இழுத்து விட்டவர் என்றால் தப்பாகாது.

அரசியல் நலனுக்காக மகாசங்கத்தை முதன் முதலாக பயன்படுத்திய அரசியல்வாதி என்ற 'பெருமை'யைப் பெற்றவர் திரு ஜெயவர்த்தனா.

தனிச் சிங்களச் சட்டத்தின் விளைவாய் உருவான இனப்பிரச்சினையை இடைக்காலத்தில் ஏற்பட்ட உடன்பாடுகள் மூலம் தீர்க்க விடாமல், அதற்கு முழு உருவம் கொடுத்து வளர்த்துவிட்டதில் பெரும்பங்கு திரு ஜெயவர்த்தனாவுக்கு உண்டு

1983இன் பின்னர்

1983 ஜூலையின் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா உதவ முன் வந்தது.

அன்றில் இருந்து 'ஷணம் பித்தம் ஷணம் வாதம்' கொள்கையைக் கடைப்பிடித்து தினமும் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழக்கும் நெருக்கடி நிலையை திரு ஜெயவர்த்தனா தனது ஆட்சியில் தோற்றுவித்தார்.

இன்று மாகாண சபை யோசனைகளைச் சமர்ப்பித்து விட்டு 'தேசியத் தலைவருக்கும் தகுதியைப் பெறக்கூடிய பேச்சுக்களை நிகழ்த்தி வருகின்றார்.

''சரியான பாதையைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துக்குக் காட்டிவிட்டேன்— இப்படி நெஞ்சு நிமிர்த்தியும் கூறுகின்றார் அவர்.

''திரு பண்டாரநாயக்கா 1926 இல் கூறியது, 1956இல் பண்டா — செல்வா ஒப்பந்தத்தில் உள்ளது — ஆகியன தான் இந்த மாகாண சபையோசனை—

''திரு பண்டாரநாயக்காவின் கொள்கைகளை அவரின் மனைவி திருமதி பண்டாரநாயக்கா கடைப்பிடிக்காவிட்டாலும் நான் கடைப்பிடிக்கப் போகின்றேன்''-

இப்படி எல்லாம் மேடைக்கு மேடை திரு. ஜெயவர்த்தனா கூறிவருகின்றார்.

வெற்றி பெறுவாரா?

காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்காவின் 'அரசியல் மனைவி' யாக மாறவிரும்பும் திரு ஜெயவர்த்தனா அதில் வெற்றி பெறுவாரா? இது தான் இன்று எழுந்துள்ள கேள்வி.

1957 இல் அவரால் அரசியலுக்கு இழுத்து விடப்பட்ட மகாசங்கம் இன்று அவரையே 'விழுங்க'க் காத்து இருக்கின்றது.

எல்லாப் பீடங்களும் ஒன்று சேர்ந்து விட்டன

1980 மாவட்டசபைத் தேர்தல் சமயம் திருமலை மாவட்டத்தில் சேருவில தொகுதியில் பிரசாரக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தனா பேசினார்

அவர் சொன்னார்:

''திருமலை மாவட்டம் சிங்கள பௌத்தர்களின் நாகரிகம் செழித்து வளர்ந்த பிரதேசம். மீன் பிடிக்க வந்த இடத்திலேயே தமிழர்கள் இங்கு குடியேறினர் -

இப்படி 'இனத் தலைவனாக' பேசிய திரு ஜெயவர்த்தனா 'தேசியத் தலைவனாக'க் காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றாரா? அல்லது மாற முயற்சிக்கின்றாரா?

இந்தச் சந்தேகமும் எழாமல் இல்லை.

களனிப் பேச்சு

அண்மையில் களனியில் ஒரு தொழிற்சங்கக் கூட்டம் ஒன்றில் அவர் பேசியது, சிங்கள மக்கள் மத்தியில் பரவலான தப்பபிப்பிராயத்துக்கு இடமளித்து விட்டதாம்.

'அநுரா பண்டாரநாயக்காவின் தந்தை வழி, தமிழ் கலப்பு உள்ளது

'எனது பாட்டன் வழி' இந்திய வம்சாவழி

'சுத்த சிங்கள இரத்தம் யாருக்கு இருக்கும் என்பதைக் கண்டு பிடிப்பதே சரியான கஷ்டம்' -

இப்படித் திரு ஜெயவர்த்தனா கூறியிருந்தார்.

இப்படிக் கூறி 'தேசியத் தலைவனா'க வரும் தமது முயற்சியில் திரு ஜெயவர்த்தனா வெற்றி பெறுவாரா?

அல்லது இனப்பிரச்சினைத் தீர்வு 'சாண் ஏற முழம் சறுக்கின' கதையாக மீண்டும் மாறி விடுமா?

மகாசங்கத்தின் போக்கும் ஜனாதிபதியின் பேச்சும் தான் இதைத் தீர்மானிக்க வேண்டும்

ஆவணி மாதம் ஆவலாக எதிர்பார்க்கப்படும் மாதம் என்பது மட்டுமே இப்போதைக்குத் தெரியும்.

உள்ளும் புறமும்

குறுமுனி

பட்டினி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கிருமிநாசினியும் வருவதற்கு முன்னரும் அவர்கள் தங்கள் உணவுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்தார்கள்.

சிறிது காலத்திற்காவது நாம் அவர்கள் கையாண்ட முறைகளைக் கைக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எமது அவசரமான விவசாயத் திட்டம் பழைய விவசாயமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்.

நவீன விவசாய முறைகள் இப்போது எமக்குக் கொல்லுந் தேன். எனவே அதனைக் கருத்திற் கொண்டு எமது விவசாய முறைகளைத் தற்காலிகமாக மாற்றுவது அவசியம். இல்லையேல் இப்போது கணமும் துப்பாக்கிச் சூட்டுச் சாவை எதிர்நோக்குவது போல, பட்டினிச் சாவையும் எதிர்பார்க்கவேண்டிய நிலை உருவாகும்!

சைக்கிள்கள் அபகரிப்பு

கல்முனை, ஆக 2

கடந்த மூன்று தினங்களில் பட்டிருப்புத் தொகுதியில் 25க்கும் அதிகமான மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது (உ-எ-84)

எங்கள் சேவை

EMPLOYMENT

41 Year old ex.Govt. Clerk with 17 Years experience seeks employment as Clerk / Cashier / Asst. Manager / Sales Representative. Ability to attend to correspondence independently. Wide knowledge in Administration/ Accounts / Stores. Fair in English Typing. Fluent in all three Languages. Certificate of Competence to drive Commercial Vehicles. P. Balendran, Main Road, Thondaimanaru.

UNDER BOOKS

Sri Lankan Legitimacy Over North & East by Somasundaram Vanniasingham Price Rs. 30/- at all Bookstalls.

தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தேவை. தொடர்பு கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

யாழ் நகர மக்களுக்கு!
அரிய சந்தர்ப்பம்!!
உதயனின் உதய சேவை
விநியோகம் இலவசம்!!!
அதிகாலையில் கடைக்குப் போய் பத்திரிகை வாங்க நேரத்தைச் செலவிடாதீர்!
உதயனின் உதய சேவையில் பதிவு செய்து வீட்டில் இருந்தவாறே உதயன், சஞ்சீவி படிக்கலாம். உடன் சந்தாதாரராகுங்கள்!
யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அதிகாலையில் வீடுகளுக்குப் பத்திரிகைகளை விநியோகிக்கும் இலவச சேவையை நாம் ஆரம்பித்துவிட்டோம்.
நீங்களும் சந்தாதாரராகப் பதிவு செய்தால் வீண் சிரமமின்றி உதயனையும் சஞ்சீவியையும் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம், தொடர்பு கொள்ளுங்கள்.
விநியோகப் பகுதி,
'உதயன்',
த பெ எண். 23
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15-ஆம் லக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 02—08—1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd,
15 Second Lane, Power House Road. JAFFNA